# களத்தில்




நாம் சமாதானத்திற்குக் கதவடைக்க வில்லை. சமாதான வழியில் பேச்சுக்களை நடத்தி பிரச்சினையைத் தீர்க்கும் நாகரிக மான நடைமுறையையும் நாம் கைவிட வில்லை. சிங்களத் தலைமையின் நேர்மை யில் எமக்கு நம்பிக்கை இல்லை என்பதால் சர்வதேச சமூகத்தின் முன்நிலையில் மூன் றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் நாம் சமாதா னப் பேச்சுக்களில் பங்குகொள்ள தயாராக இருக்கின்றோம்.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*


(25.03.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (182) அன்பளிப்பு : 60 p


# தமிழ்ச் சிறுவர் ஆண்டு - 1999



ஒவ்வொரு சிறுவருக்கும்

அ) உயிர் வாழ்வதற்கான மறுக்கமுடியாத உரிமை உண்டு.

ஆ) எதுவித பாகுபாடுமின்றி முழு உரிமைகளையும் அநுபவிப்பதற்கான உரிமை உண்டு.

இ) தாம் சொல்பவற்றை கேட்குமாறு கோரும் உரிமை உண்டு.

*(ஐ.நா. சிறுவர்கள் உரிமைக்கான உடன்பாடு 20.11.1989)*

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

ஓயாத போர். தமிழீழ மக்கள் மீது ஓயாத போர். தமிழீழ மண் மீது ஓயாத போர். இதுதான் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் வேதம். இது தான் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களின் அரசியல் செயற்திட்டம். இந்த அரசியல் செயற்திட்டத்தினை அப்படி விரைவுபடுத்துகின்றோம் இப்படி விரைவுபடுத்துகின்றோம் எங்களுக்கு வாக்களியுங்கள் என சிங்கள மக்களிடை வாக்கு வேட்டையாடுவதே சிங்கள அரசியல் கட்சிகளின் தேர்தல் கால செயற்பாடுகள். சிங்கள அரசியல்கட்சிகளின் அரசியல் பதவிப்போட்டிக்கு பந்தாடப்படும் பரிதாபநிலையில் தமிழீழ மக்களின் உயிரும் உடலும் உரிமைகளும். ஒவ்வொரு முறை தேர்தல் வரும் பொழுதும் சிங்களப் படைகளை தமிழர் மீதும் தமிழீழம் மீதும் ஏவி விடுவது சிங்கள அரசாங்கங்களின் வழமையான செயற்பாடுகளில் ஒன்றாகிவிட்டது. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு புதுப்புதுப் பகுதி மீது ஆக்கிரமிப்பு முயற்சி. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதம் விதமான பெயரீடுகள். ஆக்கிரமிப்பின் திசைகள் மாறலாம். இடங்கள் மாறலாம். ஆனால் அதளால் பாதிக்கப்படுபவர்கள் அழிக்கப் படுபவர்கள் தமிழீழ மக்களாகவும் நாசமடையும் மண் தமிழீழ மண்ணாகவும் இருக்க வேண்டும் என்பதே சிங்கள அரசாங்கத்தின் நிலைப்பாடு. இந்த வகையில் இம்முறை மடு நோக்கி மறுமுறை மல்லாவி நோக்கி மாறலாம். இடமல்ல பிரச்சினை அழிவு தமிழர்களுக்கும் தமிழ் மண்ணுக்கும் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதே சிங்கள அரசாங்கத்தின் ஒரே நோக்கு.

இதனால் (1) சிங்கள சிறிலங்காவின் நோக்குகளை முறியடித்து சிங்கள அரசாங்கத்தினால் தமிழீழத்தின் எந்தப் பகுதியையும் நிரந்தர ஆக்கிரமிப்புக்கு உள்ளாவதை தடுப்பதும் (11) சிங்கள அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ சக்திகளை வீணடிக்க வைக்கும் வகையில் காலத்துக்கு காலம் மேற்கொள்ளும் கவனத்தை திசை மாற்றும் படையெடுப்புக்களை இராணுவ இராஜதந்திரத்துடன் அணுகி இராணுவ பலத்தைத் தக்க வைத்து வேறு வழிகளில் சிங்களப் படைகளுக்குப் பலத்த சேதங்களை விளைவித்து நமது மண்ணில் இருந்து அவர்களை விரட்டி அடிப்பதும் தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டங்களாக உள்ளன.

இதனால் இத்தகைய படை நகர்வுகளினால் எதையுமே நிலையாகச் சாதிக்க முடியாது என்பது சந்திரிகா அரசாங்கத்திற்கு தெரியாததல்ல. ஆயினும் இவ்வாறான ஆக்கிரமிப்புக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து அதன் மூலம் தமிழீழ மக்களுக்கும் தமிழீழ உட்கட்டுமானத்திற்கும் சேதங்களை ஏற்படுத்தினால் அதைக் கண்டு மகிழ்ந்து சிங்கள மக்கள் தங்களுக்கு வாக்களிப்பார்கள் என்பதே சந்திரிகாவின் இத்தகைய நடவடிக்கைகளுக்கான நோக்கு. தமிழீழ மக்களின் அழிவில் மகிழ்வதுதான் சிங்கள மக்களின் மகிழ்வென அரசாங்கமே கருதும் ஒரு நிலையில் தமிழீழ மக்கள் தமக்கான பாதுகாப்பை தமக்கான அரசியல் எதிர்காலத்தை தாமே உருவாக்க நினைத்து செயற்படுவது தமிழீழ மக்களின் முறைமையான சுயநிர்ணய உரிமைப் பிரயோகம் என்பதை எந்தக் குழந்தையும் ஏற்றுக் கொள்ளும்.

இந்த சர்வதேச சட்டங்களுக்கு இயைபான தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தை சர்வதேச சட்டங்களுக்கு முரணனான வகையில் தடுத்து நிறுத்துவதற்கு சிறிலங்கா தனது படைபலத்தை பிரயோகித்து தமிழீழ மக்களை கொன்று குவிப்பதன் மூலம் அவர்களது அரசியல் பணிவை பெற முயற்சிப்பதே இலங்கைத்தீவின் அரசியல் யதார்த்தம். இது அப்பட்டமான இன அழிப்பு. இதனை சர்வதேச உலகு அனுமதிக்கும் வரை சிங்களப் பெரும்



# ஓயாத போர்

பான்மை அரசாங்கங்கள் ஓயாத போர் ஒன்றை தமிழீழ மக்களுக்கு எதிராக தொடர்ந்து நடாத்திக் கொண்டே இருக்கப் போகின்றது. இதனால் அப்பாவித் தமிழ் மக்களின் உயிர் உடல் உடமை அழிவுகள் வளர்ந்து சென்றுகொண்டே இருக்கப் போகின்றது. இந்த ஓயாத போரின் விளைவுகளுக்கு சிறிலங்கா அரசாங்கம் மட்டுமல்ல சர்வதேச அமைப்புக்கள் அரசாங்கங்கள் அனைத்துமே கூட்டுப் பொறுப்புடையனவாகத் திகழ்கின்றன என்பதே உண்மை. தமிழீழத்தில் பணியாற்றும் பல சர்வதேச அமைப்புக்களும் கூட தமிழீழ மக்களுக்கு சிறிலங்கா நடத்தி வரும் இனஅழிப்புக்கு எந்தளவு தூரத்திற்கு அவை குரல் கொடுக்கின்றன என்பது குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டிய நேரம் இது. ஏனெனில் அவை தமது கடமைகளில் பொறுப்புக்களில் சரிவர நடந்து கொள்ளாமையும் சர்வதேச அழுத்தங்கள் சிறிலங்காவின் மேல் போதிய அளவுக்கு மேற்கொள்ளப்படாமைக்கு மூலகாரணியாக உள்ளது.

இந்நிலையில் புலம்பெயர் தமிழீழ மக்களாகிய நாம் நமது மக்களின் உண்மைக் குரலாக ஒலிக்க வேண்டிய தேவை அதிமுக்கியமான ஒன்றாக உள்ளது. நாம் நமது மக்களின் குரலாக ஒலித்தல் என்பது அகவயப்பட்ட நிலையிலும் புறவயப்பட்ட நிலையிலும் நம்மால் மேற்கொள்ளப்படல் வேண்டும். நாம் யார், எதனால் நாம் புலம்பெயர்ந்தோம், இந்தக் காரணியை உலகு நம்மில் இனங்காணக் கூடிய வகையில் நாம் வாழ்கின்றோமா. நம் மக்கள் யாருடைய தலைமையில் இயங்குகின்றனர் என்பதை நாம் உலகிற்கு தெளிவுபடுத்துகின்றோமா. அந்த தலைமையின் ஆற்றலாலும் வலிமையாலும் தமிழீழ மக்கள் பாதுகாப்பான அமைதியை தோற்றுவிக்க எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையையும் தடுப்பது தான் சிறிலங்காவின் அரசியல் இராணுவ செயற்திட்டமாக உள்ளது என்பதை நாம் எவ்வளவு தூரத்திற்கு உலகிற்கு வெளிப்படுத்தி வாழ்கின்றோம். இவ்வாறு உலகின் பழமைமிகு குடிகளில் ஒருவராகிய தமிழீழ மக்களின் அரசியல் பொருளாதார திட்டங்களை வளர்ச்சியடையாமல் தடுக்கும் சிறிலங்கா அதன் மூலம் தமிழீழ மக்களின் சர்வதேச பங்களிப்புக்களையும் கடமைகளையும் செய்யவிடாது தடுக்கின்றது. இந்நிலையில் புலம்பெயர் தமிழீழ மக்களாகிய நாம் எமது சொல்லால் செயலால் வாழ்வால் தமிழீழ மக்களின் சர்வதேசிய நீட்சிகளாக உள்ளோம் என உலகிற்கு புலப்படுத்தி எம்மில் அவர்களைக் காண உலகிற்குச் சந்தர்ப்பம் கொடுத்தல் அவசியம்.

புறவயப்பட்ட நிலையில் நாம் தமிழீழ மக்களாக ஒன்றுதிரளல் ஒரே தலைமையை வெளிப்படுத்தல் எமது தேசத்திற்கும் எமது மக்களுக்கும் இனஅழிப்பு நோக்கில் சிறிலங்கா செய்து வரும் மனித உரிமை மீறல்களை மனித வதைகளை வெளிப்படுத்தல். இவ்வாறு சாதாரண வழிகளில் புலம்பெயர் தமிழர்கள் மேற்கொள்ளும் சமுக கடமைகளைக் கூட தடுக்கும் நோக்கில் சிறிலங்கா தமிழீழ மக்களின் விடுதலை முயற்சிகள் அனைத்தையும் பயங்கரவாதமாக காட்டப் பாடுபடுவதையும் அதற்கு இராணுவ வல்லாதிக்க சந்தை நல அக்கறைகளைக் கொண்ட சில நாடுகள் துணை போவதையும் உலகிற்கு புலப்படுத்தல். சர்வதேச நாடுகளையும் அமைப்புக்களையும் அவர்களுக்கு தமிழீழ மக்களும் உலகின் பிரிக்க முடியாத அங்கங்கள் என்ற வகையில் தமிழீழ மக்களுக்கு அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் பொறுப்புக்களையும் நினைவுபடுத்தல். இதனை அவர்கள் செய்ய காலதாமதம் ஆவதால் தமிழீழ மக்கள் அனுபவிக்கும் வார்த்தைகளால் விளக்க முடியாத துன்பங்களை சுட்டிக்காட்டி தமிழீழ மக்களின் தெசிய விடுதலைப் போராட்டத்தையும் தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரித்து அவர்கள் உலக அரங்குகளில் தமிழீழ மக்களின் நிலையை எடுத்துக் கூற சந்தர்ப்பம் அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தல் போன்ற பல அமையும்.

இத்துடன் தமிழீழ மக்களின் பலத்தை ஆற்றலைப் பெருக்க மதியும் நிதியும் அளிப்போமானால் மட்டுமே சிறிலங்கா எமது மக்கள் மேல் நடத்தி வரும் ஓயாத போர் ஓய வழிபிறக்கும்.

**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | CANADA<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | DENMARK<br>LTTE<br>P.O Box 47,<br>7400 Herning. | FRANCE<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | GERMANY<br>TCG<br>Postfach 340251,<br>51624 Gummersbach | ITALY<br>TCC<br>Via Mariano Stabile 49,<br>90139 Palermo. |
| NETHERLANDS<br>TCC<br>Ord. Hertoginnelaan-106,<br>2517 EL Den Hagg. | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | SWEDEN<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB | U.S.A<br>W.T.C.C.<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |

வன்னி பெரு நிலப்பரப்பெங்கும் போர்த் தீவிரம் பெற்று விட்டது A-9 நெடுஞ்சாலையின் மேற்குப் புறமூடாக தமது படைகளை நகர்த்தி ஏராளமான கிராமங்களையும் நகரங்களையும் சிதைத்தழித்துவரும் போரில் சிங்களப் படைகள் ஈடுபட்டுள்ளன. இடம் பெற உள்ள 4 மாகாணசபைகளுக்கான தேர்தல் வெற்றியை குறியாகக் கொண்டு சந்திரிகா ரத்வத்தை தலைமை போரைத் தீவிரப்படுத்தி நிலப்பறிப்பில் ஈடுபட்டுள்ளது. தம் மீது சுமத்தப்பட்ட அழுத்தத்தைக் குறைப்பதற்காக மேற்கு பிரதேசங்களை ஆக்கிரமிப்பதில் போர்வெறி விபரம் காட்டிய ராணுவ அமைச்சர் ரத்வத்தை, கிழக்கில் முன்னர் 40 வீதம் படையினர் நிலை நிறுத்தப்பட்டிருந்தனர். கிழக்கு மாகாணம் புலிகளுக்கு ஆட்பலத்தையும், வழங்கல் பலத்தையும் புரியும் பிரதேசமாக இருந்தது. ஆனால் தற்போது 99வீதம் கிழக்கு மாகாணம் தமது படைகளால் துப்பரவு செய்யப்பட்டு விட்டதால் நாம் வடக்கில் அனைவரையும் குவித்துள்ளோம் என தமது போர்குறித்து விளக்கம் கொடுத்துள்ளார்.

சிறிலங்காவின் இப்போரானது போரைத் துரிதமாகவும் மூர்க்கமாகவும் நடாத்தி வெற்றியைக் காணும் போது மடு தேவாலயம் வரை தமது ஆக்கிரமிப்பை நீடித்துள்ளதாக அறிவித்துள்ளனர். இதற்கு 'ரணகோச II' எனப் பெயரிட்டது டன் 325 சதுர கி.மீ பரப்பை கைப்பற்றியுள்ளார்களென கூறுகிறார்கள். இப்பாரிய நிலப்பறிப்பால் பல்லாயிரம் மக்கள் அகதிகள் ஆக்கப்பட்டு அயல் புறகாடுகளிற்கும் நகர்களிற்கும் விரட்டப்பட்டுள்ளனர்.

யுள்ளார். புலிகள் A-9ன் மேற்கு பாதை ஊடாக இராணுவத்தை பரவ அனுமதித்துள்ளார்கள் என்பதே உண்மை என்பதை போரை அவதானிக்கும் அனைத்து ஆய்வாளர்களும் ஏற்றுக்கொள்கின்றனர்.

தற்போது எழும் பிரதான கேள்வி எதுவரை புலிகளின் அமைதியும், அனுமதிப்பும் தொடரும் என்பதே என பலதரப்பினரும்



# வன்னியின் மேற்கு போர்முனை

## வன்னியின் மேற்குப் போர்முனை ஊடான புதிய இராணுவ நகர்வுகள்

## 'ரணகோச I, II' பற்றி ஒரு பார்வை

கேள்வி எழுப்பியுள்ளார்கள். தள்ளாடி முகாம் மீது நாலரை மணி நேர தாக்குதல் ஒன்றை தொடுத்ததன் மூலம் புலிகள் தமது உசார் நிலையை தெட்டத்தெளிவாக புலப்படுத்திய அதேவேளை தமது போர் முறையில் பிரதானமான மாற்றம் ஒன்றையும் வெளிக்காட்டியுள்ளனர். தள்ளாடி போன்ற பாதுகாப்பான இராணுவமுகாமின் பிரதான பகுதிகளை பத்து கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து பீரங்கிகளால் சிதைத்து எரியூட்டும் போர்முறையானது புலிகளுக்கு தமது தரைப்படைகளை நகர்த்தாது தாக்கும் ஆற்றலை கொடுத்துள்ளது. புலிகளின் போர்யுக்தி பற்றிய புதிய ஆய்வை சிறிலங்கா மேற்கொள்ள வேண்டும் என்பதை இவ் கிட்டு பீரங்கிப்படைகளின் நடவடிக்கை ஏற்படுத்தியுள்ளது.

பூநகரி ஊடாக தரைப்பாதை ஒன்றை இராணுவம் யாழ்குடா நாட்டிற்கு திறக்கப்போகின்றதா என்பதே வன்னி போர்பற்றி எழும் அடுத்த வினா ஆகும்.

வன்னியின் கிழக்குப் பகுதியை ஆக்கிரமித்துள்ள படையினர் மேற்குப் பகுதிகளூடாக தரைப்பாதையை திறந்து அவ்வலயத்திலுள் புலிகளின் கிழக்கு கடற்கரைகளுடனான தொடர்பை துண்டித்து விட முயல்வது போல் உள்ளது. இதன் மூலம் யாழ்குடா இராணுவம் மீது குறிப்பாக யாழ்நகரப்பகுதிகளில் உள்ள இராணுவ நிலைகள் மீது கடல், தரை தாக்குதலை நடாத்தும் சாத்தியத்தை இல்லாது ஒழிக்க சிறிலங்கா முற்படுகிறது. மேலும் பெரும் இன அழிப்பு வேலையில் தமிழ்நாட்டுக்கு தப்பிஓடும் தமிழர்களது இயல்பான அடிப்படை எண்ணத்தை தடுத்து நிறுத்தவும் இவ் முயற்சி எடுக்கப்படுகிறது எனலாம்.

வன்னி போர்க்களம் தமிழீழத்தின் தாய் சமர்களமாக மாற்றப்பட்டு தமிழீழத்தின் முப்படைகளும் இங்கே மரபுசார் போர் ஆற்றலை பெற்றுக்கொண்டு, திட்டமிடப்பட்ட முறையில் போரை நகர்த்துவதால் மேற்கு முனைகளூடாக நகரும் படைகள் தமிழர்களின் எதிர்கால போர்நடவடிக்கைகளில் அழிவுறுவது திண்ணம்!

***

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

யுடன் இராணுவம் செயல் படுகின்றது. முன்னாள் தளபதி றொகான் தழுவத்தையுடன் அதிகாரபோட்டியில் ஈடுபட்டுள்ள தற்போதைய தளபதி சிறிலால் வீரசூரிய தன்னை நிலை நிறுத்திக் கொள்ள போரை மூர்க்கப் படுத்தியுள்ளார். இவற்றிலும் மேலாக யாழ்குடாவில் தரை வழியால் சிறையுண்டு போயுள்ள படையினை மீட்பதற்கு தரைவழிப் பாதை ஒன்றைத் திறப்பதற்கான முன்நிபந்தனை ஒன்றை பூர்த்தி செய்வதற்கு போரை தீவிரப்படுத்த வேண்டிய நிலை தரைப்படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

தமது தரைப்படையினரை துரிதமாக இடம் மாற்றுவதன் மூலமும் பொலிஸ் மற்றும் துணைப்படையினரை பின்னரங்கங்களில் நிறுத்தி ஆட்பற்றாக்குறையை எதிர்கொள்வதன் மூலமும் பல முனைகளில் போரை நடாத்த சிறீலங்கா முயல்கிறது. ஜெயசுக்குறுய் நடவடிக்கைக்கு கிடைத்த தோல்வியின் பின்னர் தனது போர்த் திட்டத்தை மாற்றி தமது அரசியல் ராணுவ முன்னுரிமைக்கு தேவைப்படும் நடவடிக்கைகளை மட்டும் இப்போது மேற்கொள்ள இராணுவம் முற்படுகிறது என The Hindu வர்ணிக்கிறது.

'A-9 நெடுஞ்சாலையை கைப்பற்றும் தமது நோக்கத்தை தாம் இன்னும் மாற்றவில்லை' என சிறிலங்காவின் வன்னித் தளபதி மேஜர் ஜெனரல் பலகல வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் முன் மார்தட்டியுள்ளார். தற்போது வெறும் 8 வீதமான நாட்டின் நிலப் பரப்பே புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என பாராளுமன்றத்தில் புள்ளி

அரசியல் இராணுவ இலக்கினை பிரதிபலிக்கின்றது. ஆரம்ப கட்டங்களில் தமது புதிய ராணுவ யுக்திகளூடன் யாழ் குடாவை ஆக்கிரமித்த படைகள் புலிகளின் சாதுரியமான கையாளுகையும் வளர்ச்சியையும் எதிர்கொண்டபோது தோல்வி அல்லது அசைவற்ற நிலைக்கும் தள்ளப் பட்டனர். ஜெயசுக்குறு, ஓயாத அலைகள்-2 என்பன புலிக

> தள்ளாடி போன்ற பாதுகாப்பான இராணுவமுகாமின் பிரதான பகுதிகளை பத்து கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து பீரங்கிகளால் சிதைத்து எரியூட்டும் போர்முறையானது புலிகளுக்கு தமது தரைப்படைகளை நகர்த்தாது தாக்கும் ஆற்றலை கொடுத்துள்ளது

ளின் மரபு வழி சமர் ஆற்றலை மேம் படுத்தி எதிரிப் படைகளுக்கு உயிர் உடமை சேதத்தை கொடுத்தன.

இன்நிலையில் வன்னி அரங்கில் ஏற்பட்ட தொடர்ச்சியான தோல்வியை ஈடுகட்ட புதிய திட்டங்களுடன் சிறிலங்கா களம் இறங்கியுள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட 'ரணகோச' நடவடிக்கை மூலம் 535 சதுர கிலோ மீற்றர் பரப்பை தமது ஆக்கிரமிப்பின் கீழ் கொண்டு வந்த படையினர் தற்

**நாதன்**

ஒரு பகுதி மக்கள் படைகளிடம் அகப்பட்டு காட்சிப்பொருளாக்கப் பட்டுவிட்டனர். கைதான மக்களை பத்திரிகையாளர் முன்நிறுத்தி பரப்புரை நிகழ்த்தும் அரசும், படைகளும் சிங்கள சமூகத்திடமும் உலக அரங்கிலும் தமது போர்வெற்றியை இதன் மூலம் பிரகடனபடுத்துகின்றனர். இவ் நிலபறிப்பு போர் நடவடிக்கையை புலிகள் எவ்வாறு எதிர் கொள்கின்றார்கள்! தமது இராணுவம் ஆச்சரியம் ஊட்டும் விதத்தில் நகர்ந்து புலிகளை விரட்டியதாக சிங்களத்தின் வன்னித் தளபதி பலகல பத்திரிகையாளர்களிடம் கூறினார். அவர் கூறுவது பொய்யென அங்கு விஜயம் செய்த சண்டே லீடர் செய்தி ஆய்வாளர் தெரிவித்துள்ளார். தமது படைகளை புலிகள் விலக்கியதுடன் 10 நாட்களுக்கு முன்னரே இவ் ரணகோச தொடர்பான எச்சரிக்கை சமிக்ஞையை புலிகள் பரிமாறிக் கொண்டுள்ளார்கள் என அங்கு செயற்படும் சர்வதேச நிறுவனத்தினை ஆதாரம்காட்டி அவர் கூறி

தற்கொலைக் குழுவில் பெண்களும் இணைந்துகொள்வதால் பெரும்பாலான தமிழ்ப் பெண்கள் பலத்த சோதனைகளுக்கும் சந்தேகங்களுக்கும் உட்படுகின்றனர். (இது பெண்களும் இனப்பிரச்சனையும் என்ற தலைப்பில் வெளியான பெண்ணுரிமை இயக்கமொன்றின் வெளியீட்டில் காணப்பட்ட சில வரிகள்.)

அறிவியலின் உச்சத்தை எட்டித் தொடும் இவ்வுலகிற்கோ வாழ்வதற்காகப் போராடும் சிறிய தேசிய இனமொன்றின் விடுதலைக்குரலை செவிமடுக்க முடியவில்லை. தமிழ் அறிவு சீவிகளுக்கோ இனத்தின் விடிவுக்காகப் போராடிக்கொண்டே தனது விடிவிற்காகவும் போராடும் தமிழீழ பெண்களின் உரிமைக்குரலை கேட்கமுடியவில்லை. பௌதீக ரீதியில் சிங்களத்தின் பிடியிலும் மனதளவில் நிலவுடைமைச் சமூகத்தின் எச்சங்களின் ஆளுமையிலும் சிக்கியிருக்கும் தமிழ் சமூகத்திலிருந்து பெண் விடுதலைக்குரலெழுவது எத்தகைய அபூர்வமானது என்பதை இவர்களால் உணரவும் முடியவில்லை. ஏனெனில் தமிழீழத்தில் என்ன நடக்கிறது? என்பதை அறிய இவர்களுக்கு முழுமையான ஆர்வமுமில்லை. தீவிரமான பெண்ணுரிமைக் குரலெழுப்ப இவர்களுக்குக் கிடைத்த வாய்ப்பு ஏனைய தமிழ்ப் பெண்களுக்குக் கிடைக்கவில்லை என்பது இவவர்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது.

சர்வதேச பெண்விடுதலைக்காரராக இனம் காட்டும் இவர்கள் தமிழீழத்தின் மூலை முடுக்குகளில் முகிழ்ந்தெழும் உரிமைக்குரலோடு தம்மை இனம் காட்ட இன்னமும் முன்வரவில்லை. இரண்டாம் உலகப் போரின் போது யப்பானியப் போர் வீரனின் "வசதிப்பெண்டிராக" (Comfort women) மாற்றப்பட்டு இப்போது இறந்த அல்லது முதுமையடைந்து விட்ட சீன, கொரிய, பிலிப்பைன்ஸ் பெண்கள் நிலைபற்றி அறிய பயணம் மேற்கொள்ளும் இவர்களால் 02ம் கட்ட ஈழப் போரின் போது விதவைகளாக்கப்பட்ட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இளம் தமிழ் விதவைப் பெண்களை ஒருமுறை நேரில் பார்ப்பதற்காவது பயணம் மேற்கொள்ள முடியாமலிருக்கிறது. இப்பகுதிகளில் புலிகள் நிலைகொண்டுள்ளனர். போர்நடக்கிறது என்பதால் வரவில்லை என்று இவர்களில் சிலர் கூறும் காரணங்கள் உண்மையானவைதானா?

ஏன் இவர்கள் இவ்வாறுள்ளனர்? இதற்கான காரணம் என்ன? இவர்களுக்கும் சுதந்திர சிந்தனையாளர் என தம்மை வகைப்படுத்தி தீவிரமான முற்போக்கு உயரிய மனித விழுமியக் கருத்துக்களை முன் வைத்து அதில் முக்குளிப் போருக்கும் முன்னுள்ள ஒரு சங்கடமான நிலைமையை எம்மால் உணர முடிகின்றது. தமிழீழப் பெண்கள் நிலையில் பல மாற்றங்கள் இப்போது நிகழ்கின்றன என்பதை மறுக்க முடியாத நிலையில் இதனை எவ்வாறு புரிந்து கொள்வது அல்லது வகைப்படுத்துவது என்பதே இவர்களின் சங்கடம். ஏனெனில் மெத்தப் படித்த அறிவு ஜீவிகளுக்கே இன்னமும் பெண்ணியம் அல்லது பெண் விடுதலை பற்றித் தெளிவு ஏற்படாத நிலையில் ஆளாளப்பட்ட அறிஞர் கார்ல் மார்க்சே பெண் சமத்துவம் குறித்து போதிய கவனம் செலுத்தவில்லையென முறைப்பாடுகள் முன் வைக்கப்படும் நிலையில் இப்பிள்ளைகள் எதுவுமற்றவர்களாய் எவ்வாறு மாற்றங்கள் நிகழ்த்த முடியும் என்கின்ற கேள்வி இவர்களுக்குள் எழுகின்றது. இதனாலேயே பெண்விடுதலைக் குரலெழுப்பி உயரிய மனச்சான்றின் குரலை கவிதையாக வடித்த சிவரமணியின் தற்கொலைக்காக இன்றளவும் கண்ணீர் சிந்தி விவாதங்கள் தொடரும் இவர்களால் கரும்புலிகளாகி தற்கொலைப் போராளிகளாக இதுவரை வீரச்சாவெய்திய 37 பெண்கள் பற்றியோ (ஆண்கள் 109) மிகக் கொடிய ஜெயசிக்குறு போர்க்களத்தில் களமாடி வீரச்சாவெய்திய 514 பெண்கள் பற்றியோ? (ஆண்கள் 1373) இதுவரை மொத்தமாகவே விடுதலைக்கு வித்தாகிய 2211 பெண்கள் பற்றியோ (ஆண்கள் 10975) கண்ணீர் சிந்த முடியாதா? அவ்வாறு சிந்துவது பயங்கரவாதப் பெண்களுக்கு சிந்தப்பட்ட கண்ணீராகி விடுமா? நிலவுடைமைச் சமூகத்தின் எச்சங்களான சாதியமைப்பு, சீதனம், பெண்அடிமைத்தனம், பெண்விருப்பம் கேளாது வலிந்து திணிக்கப்படும் ஏற்பாட்டுத் திருமண முறைபோன்றவை காரணமாக தன்வாழ்வைத் தானே தீர்மானிக்க முடியாத உலகில் வாழ்வது அபத்தம் என தன்னை மாய்த்துக் கொண்டார் சிவரமணி. ஆனால் இப்போதோ இத்தகைய அழுத்தங்களை தாண்டி சமூகத்தின் பாசக்கயிற்றிலிருந்து தப்பி சகல அடக்குமுறைக்கெதிராகவும் போராட போரிட முன்வந்து விட்ட ஆயிரக்கணக்கான சிவரமணியின் பின்வந்தோர் பெண்ணியம் பற்றிப் பேசாமையால் பல்கலைக்கழக பட்டங்கள் பெறாமையால் முற்போக்குப் பெண்கள் வட்டத்துள் வராமையால் "பேசப்படக் கூடாதவர்கள்" ஆகிவிட்டார்களா?

ஏனெனில் தமிழ்ப்பெண்கள் உரிமைகள் மறுக்கப்படுவதற்கு விடுதலைப்போராட்டத்தின் விளைவான போரும் பிரதான காரணம் என்றும் போரில் பெண்கள் ஈடுபடுத்தப்படுவதே தவறு என்றும், விடுதலைப் புலிகள் பெண் விடுதலை பற்றி பேச்செடுப்பதற்குக் காரணம் போருக்கு ஆள் திரட்டவே என்றும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் பெண் விடுதலைக்கும் தொடர்பு கிடையாது. அதுவேறு, இதுவேறு என்று இவர்கள் கூறும் போது ஆண் மேலாதிக்க நிலையிலிருந்தே தேசிய விடுதலைப் போராட்டம் நடத்தப்படுகின்றது என்கிற தொனிப்பு மேலெழுவதையும் எம்மால் அறிய முடிகின்றது. அதே வேளை 17ம் நூற்றாண்டிலிருந்து இற்றைவரை பல்வேறுபட்ட குடியேற்றவாத ஆக்கிரமிப்பு வல்லாட்சிகளிலிருந்து தன்னை விடுவிக்க துடிதுடித்துப் போராடி விடுதலை உலகிற்குள் மிகப்பிந்தி பிரவேசிக்க முயலும் தமிழீழத்தை ஏற்கத் தயங்கும் உலகமும் சில காரணங்களை சொல்லுகின்றது. இவற்றிற்கிடையில் காணப்படும் ஒரு ஒற்றுமைத்தன்மையே எமக்கு அதிர்ச்சியூட்டுகின்றது.

அந்த ஒற்றுமைத்தன்மைதான் என்ன? உலகமே நிறுவனமயமாகி வரும் இக்காலகட்டத்தில் எல்லாவற்றிலும் பாரிய அரசியல் நிறுவனமான ஐ.நா. விளங்குகின்றது. பல திக்காலும் பாய்ந்து விரையும் புது வெள்ளம் போல பன்முகப் பரிமாணம் காட்டி வேகமாகப் பயணிக்கும் இவ்வுலகினைக் கண்காணிக்கும் பணியை ஐ.நா.வின் பின்னணியிலிருந்து அமெரிக்கா மேற்கொள்வது ஒன்றும் தெரியாத விடயமல்ல. தனிமனிதரை விடுவிக்க வேண்டும். அகிம்சை சகிப்புணர்வு ஒருமைப்பாடு வளர்க்கப்பட வேண்டும். நுண்மை தேசியவாதம் (Mickro- Nationalism) ஆபத்தானது. அது பல நூற்றுக்கணக்கான சிறிய நாடுகளை தோற்றி குழப்பத்தை உருவாக்கி விடும். இதற்குப் பதிலாக மனித இனத்தில் பன்முக அடையாளம் பேணப்படும் அதேவேளையில் குறுகிய தேசியவாதம் களையப்பட வேண்டும்.

இது ஐ.நா. போன்ற நிறுவனம் சார்ந்த அறிவு ஜீவிகளின் கருத்தாக்கம் இதற்கு எதிர்த்திசையில் இன்னொரு கருத்தாக்கமுண்டு. மாக்சியம் கூறும் வர்க்கப் போராட்ட சூழ்நிலை இப்போதைக்கு உருவாக வாய்ப்பில்லை. மாக்சியம் மறைந்தாலும் அது உருவாக்கிய வெற்றிடத்தை நிரப்ப அணு ஆயுத மேலாண்மை தடுப்பு இயக்கம், சூழல் காப்பு பசுமை பேண் இயக்கம், சிறுவர் நலன் பேண் அமைப்பு, பெண் விடுதலை அமைப்பு என பல புரட்சிகர தன்மைகள் கொண்ட இயக்கங்கள் இன்று தோன்றுகின்றன. இது பிடல்காஸ்ட்ரோ போன்றோரின் கருத்து. தமக்கென எல்லைகள் கொண்ட நிலப்பகுதிகளில் தமக்கான அரசொன்றை தாபித்த இவர்கள் கூறுவதில் நியாயம் உண்டு. ஆனால் எல்லைகளற்ற உலகமே கிராமமாகிவிட்ட உலகில் தாம் வாழ்வதாக எண்ணும் எமது அறிவு சீவிகளோடு தமது கருத்து நிலைக்களங்களை தாம் சார்ந்த நிறுவனத்திற்கூடாகவே உருவாக்குகின்றனர். இனம் சார்ந்து சிந்திப்பதை நிறுத்தி விட்டு நிறுவனம் சார்ந்த சிந்திக்கும் இவர்கள் பகுதி பகுதியாக தலைமை அடிப்படையில் மாறுபாட்டதை விடுவிக்க முயல்கின்றார்கள். இவ்வாறு அறிவுமுகம் அணிந்தோரை புதியதொரு பகுப்பாகவே இப்போது ஆய்வாளர் சிலர் வகைப்படுத்துகின்றனர். நிறுவனம் சார்ந்த அறிவுசீவிகள் என்பதே இப்பகுப்பு. எனவே இவர்களால் துயரங்களைச் சுமந்து, ஆயுதங்களைத் தாங்கி, உயிர்களை விலையாக்கி வலிமையான விடுதலைப்போராட்டமொன்றை அதுவும் ஆண் மேலாதிக்கம் ஆழமாக நிலவும் சமூக மொன்றில் பெண்போராளிகளின் முழுமையான பங்களிப்போடு நடத்த முடியும் என்பதை நம்ப இயலவில்லை. தமிழ் பெண் என இதுவரை உருவாக்கப்பட்ட பிம்பத்தை உடைத்தெறிந்து சீருடை அணிந்து ஆயுதம் தாங்கி களமாடும் தமிழ்ப் பெண்ணின் புதிய பிம்பம் எல்லா அடக்கு முறைக்கும் எதிரானதே விடுதலைப்போருக்கூடாக புதிய வாழ்வை இவர்கள் தேட முயல்கையில் அவர்களோ, அப்போரும் பெண்உரிமை மறுப்பிற்கு பிரதான காரணம் என காரணம் கற்பிக்கின்றனர்.

தமிழீழத் தேசிய உருவாக்கத்தில் இன்று நாம் செலுத்தும் பங்கே நாளைய தமிழ் பெண்ணின் சமத்துவ நிலைக்கான வல்லமையை உருவாக்கும் உத்தரவாதம். அந்த நாள்வரை விழிப்புணர்வுள்ள விடுதலைக்கு தகுதியான பெண்களாக தமிழீழப் பெண்கள் மாற்றப்பட வேண்டும். இதுவே தமிழீழப் பெண்ணின் போராட்ட வழிமுறை. இவை தொடர்பான ஆக்கபூர்வமான ஆய்வுகளே இன்று தேவையானவை. பெண்கள் நிலை இவ்வாறு, அவ்வாறு இருக்கின்றது என்கிற முடிவில்லாத ஆய்வுகளை விடுத்து பெண்கள் நிலையில் எல்லைகளில் மாற்றத்தை கொண்டு வர முடியும் என்று அறிவித்த தமிழீழ பெண்ணின் புதிய தத்துவம் பதிக்கப்பட்ட உரிமைகளை பெறு முறையும் போது அது தாம் சார்ந்த இனத்தின் பதிக்கப்பட்ட உரிமைகளை பெறுவதை முன் நிபந்தனையாக்குவதை தமிழீழப் பெண் இன்று நடைமுறைக்க வில்லை. எனவே இவ்வுலகில் எவரும் சுமக்காத பெரும் சுமையை தாங்கும் தமிழீழப் பெண் கூறுகிறாள்.

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]"

பெண்போராளி அம்புலியின் கவிதை





# நந்திக் கடலோரம் ஒரு நாள்

ஒரு புதன்கிழமை சந்தைக்கு மீன் வாங்கச் சென்றேன். சந்தையில் இறாலும் நண்டும் நிறைந்து காணப்பட்டன. கடலிலே மீன் பிடிக்கத் தடை குறுகிய பிரதேசத்தில் தான் மீன் பிடிக்கின்றார்கள். அப்படியிருக்க எப்படி இவ்வளவு இறாலும், நண்டும் பிடித்து வர முடிந்தது என்று எனக்கு ஒரே ஆச்சரியம். எனக்குள் யோசித்துக் கொண்டு நண்டும் இறாலும் வைத்திருந்த ஒரு மீன் வியாபாரியை அணுகி கேள்வி தொடுத்தேன். அவர், தம்பி இவற்றை நந்திக்கடலில் பிடித்தோம் என்றார். அப்பத்தான் எனக்குத் தெரியும் நந்திக்கடலிலையும் மீன்பிடித் தொழில் செய்கிறார்கள் என்டு. சரி பக்கத்தில் தானே இருக்குது, விடிய ஒருக்காப் போய்ப் பார்ப்பம் என்று எனக்குள் எண்ணிக் கொண்டு வீட்டிற்குச் சென்று ஆயத்தங்கள் செய்து அடுத்த நாள் அதிகாலை ஐந்து மணியளவில் நந்திக்கடலை அண்மித்தேன். முன்னதாகப் பற்றைக் காடுகளும் அதனிடையே சிறு சிறு குடிசைகளும் தென்பட்டன. எங்கும் பசுமை தெரிவதாய் பறவைக் கூட்டங்களுடன் இயற்கை அழகு நிறைந்ததாக நந்திக்கடலும் சூழவுள்ள பகுதிகளும் காணப்பட்டன.

இனிய காலைவேளையின் இதமான காற்றுடன் சூழலின் வனப்பும் சேர்ந்து என்னைப் பரவசப்படுத்தின. உற்சாகமாக நான் நந்திக்கடலோரத்தை ரசித்துக்கொண்டிருந்த போது கடலில் சற்றுத் தூரத்தில் தனியாக ஒருவர் தடுப்பினை வலித்துக் குல்லாவைச் செலுத்தியபடி வருவது தெரிந்தது. குல்லா என்பது சுமார் ஒரு அடி அகலமும் பதினைந்து அடி வரை நீளமும் உடைய ஒரு வகைப்படகு.

**தமிழீழம்**
**இளவரசன்**

கரையை நெருங்கிய அவரை நோக்கி நானும் முன்னேறினேன். அவரது படகில் பெருந்தொகையான இறால்களும் பல வகைப்பட்ட மீன்களும் காணப்பட்டன. அவற்றைப் பார்த்தவாறே நான் அவரிடம் பேச்சுக் கொடுத்தேன். 'நீங்கள் இவ்வளவு இறால்களையும் மீன்களையும் பிடிக்கிற தெண்டால் சாதாரணமா எவ்வளவு நேரம் கடலில் நிற்பியள்' 'நேற்றுப் பின்னேரம் வெளிக்கிட்டனான் தம்பி இப்ப விடியத் தான் வாறன் வழமையாக இப்படித்தான் செய்யிறனாங்கள் எங்கட நாளாந்தப் பிழைப்பு இப்படித்தான் நடக்குது தம்பி' என்று பதிலளித்தபடியே குல்லாவினுள் நின்ற தண்ணீரை அள்ளி அவர் வெளியே ஊற்றிக் கொண்டிருந்தார்.

'இந்த இறால் மீன் எல்லாத்தையும் நீங்கள் சந்தைக்குக் கொண்டு போய் விக்கிற நீங்களோ அல்லது வியாபாரிகள் இங்க வந்து வாங்கிறவர்களோ' என நான் வினாவைத் தொடர அவர் கூடுதலாக நான் சந்தையில் மீனைக் கொண்டு போய் விக்கிறனான். இறால் பிடிபடுகின்ற காலங்களில் வியாபாரிகள் வருவார்கள். ஆனாத் தம்பி நானே கொண்டு போய்ச் சந்தையில குடுக்கிறது தான் எனக்கு லாபம் என்று விடை தந்தார்.

அதே நேரம் இன்னொரு மீனவர் கரையை நோக்கி வந்து கொண்டிருந்தார். அவர் படகினைக் கரையேற்றித் தனது வேலைகளை முடித்ததும் எம்மை நோக்கி வந்தார். 'நீங்கள் பிடிச்ச இறாலை என்ன விலைக்குக் கொடுக்கிறனீங்கள்' என்று நான் கேட்க மற்றவர் 'பொதுவா 80,100 ரூபாவுக்கு கொடுக்கக் கூடியதாக இருக்குது முந்திக் கொழும்பு அனுப்பேக்கை 200,300 ரூபாவுக்கு குடுக்கிறனாங்கள்' என்றார்.

'நந்திக்கடலில் என்னென்ன வகையான மீன்கள் பிடிபடுகுது' என்று வினாவத் தொடங்க அவர்கள் 'பொதுவாக இறால், நண்டு, ஜப்பான், என்பன அதிக அளவில பிடிபடுகுது அதோட இந்தக் கடல் பெருங் கடலோடையும் கலக்கிறதால சகல கடல் வாழ் மீன்களின் குட்டி மீன்களும் ஓரளவு பிடிபடுகுது. என்றாலும் இறால்தான் அதிகமாகப் பிடிபடும் மாசிமாதம் தொடங்கி சித்திரை மாதம் வரை நன்று கூடுதலாகப் பிடிபடும்' என்றும் கூட்டாக மாறி விளக்கம் தந்தனர்.

'இன்னொரு விசயம் தம்பி கார்த்திகை மார்கழி மாதங்களில் பெருங்கடல் மீன் சந்தைக்கு வாறது குறைவாக இருக்கிறதால அந்தக்காலத்தில இங்கை பிடிக்கிற மீன்களை கூடிய விலைக்குக் குடுக்கக் கூடியதாக இருக்கிறது.' என்று தமது தொழில் பற்றி முழுமையான விளக்கத்தைத் தந்தார் முதலாமவர்.

இப்போது நந்தி கடலோரம் நிறையப் படகுகள் கரை வந்து விட்டன. மெல்ல நடந்தபடியே எதிர்ப்படுவோரிடம் வினாக்களைக் கேட்டேன்.

'இந்தக் கடலையே நம்பித் தொழில் செய்கிற உங்களுக்கு வருமானம் என்ன மாதிரி'

'பொதுவாக 1990ம் ஆண்டுக்கு முந்தி ஒரு நாளைக்குச் சராசரியாக 1000 ரூபா வருமானம் பெறக் கூடியதாக இருந்தது. 1990 இராணுவ நடவடிக்கையாலையும் தொடர்ந்தும் வந்த இராணுவக் கெடுபிடிகளாலையும் தொழிலுக்கே போகமுடியாத நிலை ஏற்பட்டது. இதால சிறிய பரப்பில தான் தொழில் செய்யக் கூடியதாக இருந்தது. அது மட்டுமில்லாமல் இராணுவம் நின்டதால் நந்திக்கடலும் பெருங்கடலும் சந்திக்கும் இடத்தில் (வட்டுவாகல்) தொடுவாய் வெட்டேலாமல் போனதால இறால் உற்பத்தி நல்லாக் குறைஞ்சு போட்டுது. இப்ப 1996 இல முல்லைத்தீவு ஆமிக்காம்ப் அடிச்ச பிறகுதான் ஒரு நாளைக்குச் சராசரியாக 100 ரூபா எண்டாலும் வருமானம் பெறக் கூடியதா இருக்குது.'

எனப் பெருமையோடு பதில் தந்து அப்பால் நகர்ந்தார் இன்னொருவர்.

இந்த நந்திக்கடலை நம்பி எத்தனை பேர் தொழில் செய்கின்றார்கள், எனக் கூறமுடியுமா என ஒருவரிடம் கேட்டதற்கு, 'சின்னாத்தங்காடு, வட்டுவாகல், கோயில் குடியிருப்பு, மணற்குடியிருப்பு, வண்ணாக் குளம், கள்ளப்பாடு, சிலாவத்தை, கேப்பா புலவு, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களைச் சேர்ந்த சுமார் பத்தாயிரம் பேர் மட்டில தொழில் செய்கிறார்கள். இதில கன பேர் பகுதிநேர தொழிலாகவும் சிலர் நிரந்தரத் தொழிலாகவும் செய்கின்றனர்.' எனப் பகன்றார்.

'இந்தக்கடலில் தொழில் செய்கிறதில நீங்கள் எதிர் நோக்கிற பிரச்சனைகள் எதுவுமுண்டா' என்று என்னொருவரிடம் வினாவினேன்.

'பிரச்சனைகள் நிறைய இருக்கு முதலாவதா பொருளாதாரத் தடை காரணமா இது எமக்குத் தேவையான வலைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. கிடைக்கிற வலையும் அதிக விலையாகவுள்ளது. அதுக்கேற்ற மாதிரி வருமானம் கிடைக்கிறேல்ல. அதோட பல வருடத்திற்கு முந்தி வாங்கின வள்ளங்களையே திருத்தித் திருத்திப் பாவிக்கவேண்டியுள்ளது. தொடர்ந்து நந்திக்கடலாறு வெட்டியிடாமல் புனரமைக்காமல் இருப்பதால் ஆற்றில் மணல் அதிகமாகச் சேர்ந்து திடலாகக் கிடக்குது. இப்படித் தம்பி என்றும் நிறையப் பிரச்சனை இருக்குது' என்று சொல்லிக் கொண்டு போனவரை,

'அண்ணை இப்பதான் ஒருகேள்வி நினைவுக்கு வருகுது நீங்கள் பொதுவாக எந்த வலையைப் பாவிக்கிறனீங்கள்? என்று இடைமறித்தேன். 'இந்தக் கடலைப் பொறுத்த வரை தம்பி வீச்சுவலை மாத்திரம் தான் பயன்படுத்தலாம் படுப்பு வலை பாவிக்க முடியாது. அதிலையும் இரண்டரை இஞ்சி வீச்சுவலையைப் பாவித்தால்தான் தொடர்ச்சியாகப் பிரச்சனை இல்லாமல் தொழில் செய்யலாம்' என்றார்.

'ஏன் அண்ணை இரண்டரை இஞ்சி வீச்சுவலை மாத்திரம் பாவிக்கிற நீங்கள் மற்றவலை பாவிக்க முடியாதோ' எனக் கேட்டேன். 'பொதுவாக எந்த வலையையும் பாவித்து இறால் மீன் போன்றவற்றைப் பிடிக்கலாம். ஆனால் இதைவிடச் சிறிய வலையைப் பாவிக்கிறபோது இறால் முட்டைகள் நீரில் மிதந்த வண்ணம் இருக்கும். இந்த முட்டைகள் சிறிய கண்வலையில் படும் போது முட்டைகள் உடைந்து விடும். அதனால இறால் உற்பத்தி பாதிக்கப்படும். அதோட சிறிய கண்வலைகள் பாவிக்கின்ற போது சிறிய இறால்கள் பிடிபடுகுது என்றால் பெரிய இறால்கள் உருவாகாமல் போக அதன் மூலம் இறால் உற்பத்தியும் பாதிக்கப்படும். இந்தப் பிரச்சனையைத் தவிர்ப்பதற்குத் தான் இரண்டரை இஞ்சி வலை பாவிக்கிறனாங்கள்.'




இப்படியே பல மீனவரைச் சந்தித்து கேள்விகள் கேட்டு அறிந்து கொண்டு எங்கள் முந்தைத் தமிழ் வீரம் வந்து நின்று ஆடிய நந்திக் கடலை ஆசை தீரப்பார்த்துக் கொண்டு நானறிந்தவற்றை யாருடனாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்புடன் வீடு திரும்பினேன். •

# இது பேசுவதற்கான நேரம் அல்ல செயல்படுவதற்கான தருணம்

**ஈழத் தமிழர் எழுச்சி மாநாட்டில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஏ.பி. வெங்கடேசுவரன் முழக்கம்!**

மதுரையில் மார்ச் 7-ம் தேதி நடைபெற்ற ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய முன்னாள் வெளியுறவுத்துறைச் செயலாளர் ஈழத் தமிழர் இனப் பிரச்சினையில் இந்தியா உடனடியாகத் தலையிடவேண்டும் என தமிழக மக்கள் அனைவரும் ஒருமித்த குரலில் கோரிக்கைகளில் வைக்க வேண்டும். இது பேசுவதற்கான நேரமில்ல. செயலில் இறங்கவேண்டிய நேரம் எனக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் வீரத்திற்குப் பெயர்பெற்ற தமிழக மக்கள் ஏனோ மவுனமாக இருக்கிறார்கள். அதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை. இப்போதும் அதற்கு பஞ்சம் வந்துவிட்டது. அந்த வீரத்தை விரைவில் நாம் மீட்டுக்கொள்ள வேண்டும்.

மகாத்மா காந்தி அகிம்சையை விரும்பினார். ஆனால் கோழைத்தனமா, பயங்கரவாதமா என்று கேட்டால் அவர் பயங்கரவாதத்தையே தேர்ந்தெடுப்பார். எனவே கோழைகளாக இருக்கக்கூடாது.

1987ம் ஆண்டு இந்திய இராணுவத்தினை முட்டாள்தனமாக இலங்கைக்கு அனுப்பினார் ராஜீவ்காந்தி. ஆனால் அங்கே என்ன நடந்தது. தமிழினம் வேட்டையாடப்பட்டது. தமிழனுக்கு எதிரான போராட்டங்கள் இலங்கையில் வலுப்பெற்றன.

1986ல் பெங்களூரில் நடந்த தெற்காசிய மாநாட்டில் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனேயும், ராஜீவ் காந்தியும் சந்தித்துக் கொண்டனர்.

அப்போது ஈழத்தில் தனி அரசு உருவாகுமானால், அது தமிழ்நாட்டுடன் சேர்ந்து இந்தியாவுக்கும் ஆபத்தாகும் என்று ஜெயவர்த்தனே தெரிவித்தார். அவர் சொன்னதை ராஜீவ் எளிதில் நம்பி விட்டார்.

இரு நாட்டு தலைவர்கள் பேசும்போது குறுக்கே பேசக்கூடாது என்பதால் நான் ஜெயவர்த்தனே போன பின் இது பற்றி ராஜீவிடம் பேசினேன். ஜெயவர்த்தனே கூறியதுபோல் ஒரு போதும் நடக்காது. அது வெறும் குப்பை. தமிழ்நாடு ஒரு போதும் இந்தியாவை விட்டு பிரிந்து செல்லாது என்று தமிழன் என்ற முறையில் தெரிவிக்கிறேன் என்று சொன்னேன்.

ஆனால், நான் சொல்வதை விட அயல்நாட்டு பிரதமர் சொல்வதை அவர் நம்பக்கூடியவராக இருந்தார். நான் பதவியைவிட்டு விலகிய சில மாதங்களில் இலங்கைக்கு இந்திய அமைதிப்படை அனுப்பப்பட்டது.

அதனால் ஏற்பட்ட முடிவுகள் அனைத்தும் உங்களுக்கு தெரியும். ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். 1500-க்கும் மேற்பட்ட இந்திய சிப்பாய்கள் பலியானார்கள். ஆனால் கடைசியில் நன்றிகூட சொல்லாமல் இந்திய அமைதிப்படையை இலங்கை வெளியே போகச் சொன்னதுதான் மிச்சம்.

1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழர் மாநாட்டின்போது தமிழர்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டிவிட்டது. 1971ம் ஆண்டு ஜே.வி.பி. எனப்படும் ஜனதா விமுக்தி பெரமனா நடத்திய கிளர்ச்சியானது சிங்கள அரசின் கொள்கைகள் தமிழ் மாணவர்களுக்கு மட்டும் எதிரானதல்ல. அது சிங்கள மாணவர்களுக்கும், சிங்கள மக்களுக்கும் எதிரானது என்பதை வெளிப்படுத்தியது. ஜனதா விமுக்தி பெரமனாவுடைய அந்தக் கிளர்ச்சியின்போது இந்திரா காந்தி இந்திய படைகளை இலங்கைக்கு அனுப்பி சிங்கள மாணவர்களை கொன்றொழிப்பதற்கு துணை செய்தார். 16 முதல் 20 ஆயிரம் சிங்கள இளைஞர்கள் இதில் உயிர் இழந்தார்கள் என்பது மதிப்பீடு. அதே இந்திரா காந்தியின் மகன் இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பியதில் வியப்பு ஒன்றுமில்லை.

> **உலகத்தில் விடுதலைப் புலிகளுக்கு நிகரான வீரத்தோடும்தியாக உணர்வோடும் போராடும் வேறொரு கொரில்லாப்படை இல்லை. உலகின் வேறு எந்தப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு நிகரான ஒரு படை இல்லை என்பதை உறுதியாகச் சொல்வேன்.**

இந்தியா, அமெரிக்காபோன்ற பெரிய நாடுகளிடம் இருக்கும் பெரிய சிக்கலே என்னவென்றால் சிறிய நாடுகளிடம் ஆதிக்க மனோபாவத்துடன் நடந்துகொள்ள நாம் முற்படுகிறோம்.

சிங்களர்களும், தமிழர்களும் இனியும் சேர்ந்து வாழக்கூடிய வாய்ப்பு அங்கு இல்லை. இந்த பிரச்னைக்கு கூட்டாட்சி தத்துவம்தான் தீர்வாக இருக்கும். விடுதலைப் புலிகள் இயக்கம் முழுக்க முழுக்க நியாயமானது.

ஆனால் அதேபோல் இன்னொரு செய்தியையும் நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். இலங்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் இந்தியா இத்தரப்பிலோ அத்தரப்பிலோ சேரக்கூடாது. எப்படியானாலும் இலங்கையில் இந்திய அரசு செய்து இருப்பது என்பது நமது தமிழ்ச் சகோதரர்களுக்கு எதிரானதே தவிர மற்றவர்களுக்கு எதிரானது அல்ல.

அரசாங்கம் ஒதுங்கியிருக்க வேண்டும் என்று சொல்கிற அதே நேரத்தில் தமிழக மக்கள் வாய்மூடி மவுனிகளாக இருக்க வேண்டும் என்று பொருளல்ல இந்தியா ஒரு ஜனநாயக நாடு. தென்னாட்டு மக்கள் அனைவரும் ஒருமித்த குரலிலே டில்லியைப் பார்த்து சிங்கள அரசு தமிழர்களுக்கு எதிராக ஒடுக்கிற நடவடிக்கைகளை பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது. அதை அனுமதிக்க முடியாது என்று கூறுவார்களேயானால் இந்திய அரசு அது குறித்து செயல்படத்தான் வேண்டியிருக்கும். நான் கூறுவதை நீங்கள் விரும்பாமல் இருக்கலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரஞ்செறிந்த போரின் விளைவாகத்தான் மலையகப் பகுதிகளில் தோட்டத் தொழிலாளர்களாக இருக்கும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மலையகத் தமிழர்களுக்கு இலங்கை அரசு குடியுரிமையை வழங்கியிருக்கிறது. இலங்கை தமிழ் மக்களின் தன்மானத்தை நிலைநிறுத்தியதற்கு மேலாக அவர்கள் வேறொரு பெருஞ் சாதனையை புரிந்திருக்கிறார்கள். அது என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்குத் தெரியாது அதை நானே சொல்கிறேன் மலையகத் தமிழர்களுக்கு இலங்கை அரசு குடியுரிமை அளித்ததுதான் அது.

மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை பெற்றுத் தந்ததற்கான பெருமை ஒருபோதும் இலங்கை அரசைச் சாராது. அதுபோல மலையக தமிழர்கள் சார்பாக எப்போதும் எதிராகவே நடந்துவந்திருக்கிற இந்திய அரசையும் அது சேராது. இந்தப் பெருமை விடுதலைப் புலிகள் இயக்கத்தினையும் அதன் தலைவர் பிரபாகரனையுமே சாரும். தனி தமிழீழம் அளிப்பது ஒன்று தான் இந்தச் சிக்கலுக்கு உரிய தீர்வு.

கடுமையான நெருக்கடிகளுக்கு இடையே இங்கிருந்தும் வெளியிருந்தும் எந்தவித உதவியையும் ஆதரவும் இல்லாமல் உறுதியோடு போரை நடத்திக் கொண்டிருக்கிற விடுதலைப் புலிகளை நாம் பாராட்டினால் அதில் என்ன தவறு.

இன்னொன்றையும் நான் சொல்லவேண்டும். இலங்கையிலே என்ன நடந்துகொண்டு இருக்கிறது என்பது பற்றி நமது செய்தி ஏடுகள் நியாயமான செய்திகளைத் தருவதில்லை.

ஒரு தலைவன் உயிரைக் கொடுத்து போராடத் தயாராக இருக்கிறபோது அவரைக் குறை சொல்ல உரிமையும் தகுதியும் வேறு யாருக்குமில்லை என்று நான் கருதுகிறேன்.

உலகத்தில் விடுதலைப் புலிகளுக்கு நிகரான வீரத்தோடும் தியாக உணர்வோடும் போராடும் வேறொரு கொரில்லாப் படை இல்லை. உலகின் வேறு எந்தப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு நிகரான ஒரு படை இல்லை என்பதை உறுதியாகச் சொல்வேன்.

ஆண்களும், பெண்களுமான போராளிகள் நாங்கள் செத்தாலும் செத்து மடிவோமே தவிர ஒருபோதும் அடிபணியமாட்டோம் என்ற உறுதியோடு போராடிக் கொண்டு இருக்கிறார்கள்.

நாம் இழந்துவிட்ட துணிவை இப்போதும் வைத்துக்கொண்டு இருக்கிற அவர்களை நாம் பாராட்டுவோம்.

நம்மால் ஏதாவது செய்ய முடியுமானால் நாம் அதுபற்றிப் பேசுவதற்கு பதில் நம்மால் இயன்றதைச் செய்வோம்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# தமிழ்ச்சிறுவர்கள்

## ஆரோக்கியமான எதிர்காலத்திற்கான தமிழீழத்தின் பலம்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உலக வங்கி, ஐ.நா. சிறுவர் நிதியம் (UNESCO) என்பனவற்றுடன் இணைந்து சிறிலங்கா அரசு போசாக்கு வாரம் ஒன்றை சிறிலங்காவில் இவ்வாரம் ஏற்பாடு செய்துள்ளது.

இது தொடர்பாக சிறப்பு அறிக்கை ஒன்றை விடுத்த சிங்கள ஜனாதிபதி சந்திரிகா சிறுவர்களின் போசாக்கு உட்செலுத்துகையை அதிகரிப்பதற்கான நோக்குடன் தான் இவ்வாரம் ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் போசாக்கு உணவு பற்றிய விழிப்பை சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்த முயல்வதாகவும் கூறினார்.

சிங்கள தேசம் இவ்வாறு போசாக்கு உணவு பற்றிய 'விளக்கவுரையை' தமது தலைவரிடம் இருந்து பெற்றுக்கொள்கையில் ரணகோச 1, 2ன் மூலம் பல்லாயிரம் சிறுவர்கள் இடம்பெயர்ந்து ஒருவேளை உணவுக்கேனும் வழியற்றவர்களாக்கப்பட்டுவிட்டனர். தமது இராணுவ பரப்புரைகளுக்காக சிறுவர்களையும், வயோதிபர்களையும் நிரைக்கு இருத்தி உணவு பிச்சை போடும் சிரித்த இராணுவ முகமூடிகளுக்கு பின்னால் கோரமான இன அழிப்புப்போரின் ஈவிரக்கமற்ற தன்மை எவ்வாறு தமிழ் சிறுவர்களை இரண்டாம்தர சமூகமாக கருதுகின்றது என்பதை இது புலப்படுத்துகின்றது.

தமிழ் சிறுவர்கள் பற்றிய விடயம் தமிழீழத்தின் அடிப்படையான எதிர்காலம் சார்ந்த சிக்கல் ஆகும். அமைவுறும் தமிழீழத்தின் செழுமையும், உயர்வும் இன்றைய சிறுவர்களின் ஆரோக்கியமான வளர்ப்பு முறைகளின் ஊடாகவே எட்டப்படவேண்டியது. போரும் போரினுள் உருவாகும் பண்பாட்டு, சமூக தாக்கங்களும் கலந்த வாழ்வை இன்றைய தமிழ் சிறுவர்கள் எதிர்கொள்கின்றார்கள்.

சிங்கள அரசின் போர் தமிழ் சிறுவர்களின் ஜீவாதார வாழ்வை சிதைக்க முற்படுகிறது.

தமிழ் சிறுவர்கள் அடிப்படை உரிமையான கல்வி உரிமை பறிக்கப்பட்டு உணவுக்கும், உடைக்கும், வாழ்விடத்திற்கும் போராட வேண்டிய வாழ்நிலைக்குள் தள்ளப்பட்டுவிட்டனர். வன்னியில் பணிபுரியும் சர்வதேசநிறுவனம் ஒன்று கடந்த வருடம் விடுத்த அதிர்ச்சியூட்டும் அறிக்கையில் தற்போது இயங்கும் பாடசாலைகளை மதிய உணவுக்கு முன்னரே மூட வேண்டிய கட்டாயம் அதிபர்களுக்கு ஏற்பட்டுவிட்டது ஏனெனில் சிறுவர்களிடம் அதற்கு மேல் தாக்குப்பிடிக்கும் அளவுக்கு உணவு உட்செல்லுகை காணப்படவில்லை என கூறியது. வன்னிக்கு விஜயம் செய்த கத்தோலிக்க மதகுருமார் இவ்கோரமான சிறுவர்களின் பட்டினி நிலைபற்றி பகிரங்கமாக கண்ணீர் விட்டுள்ளனர்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையில் போசாக்கின்மை தமிழர்கள் (வன்னியில்) எதிர்கொள்ளும் பிரச்சனை என்பதனையும் பல நூறு சிறுவர்கள் போசாக்கு குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் தெரிவித்துள்ளது.

சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் உள்ள தமிழர் பிரதேசத்தில் தினசரி கைதுகளும், சித்திரவதைகளும், தேடுதல் வேட்டைகளும், அச்சுறுத்தல்களும் சிறுவர்களின் உளவளர்ச்சியை சிதைத்து வருகின்றது. ஏராளமான பாடசாலைகள் முகாம்களாயும், முகாம்சார்ந்த பிரதேசங்களாகவும் மாற்றப்பட்டுவிட்டதால் கல்வி கற்றல் என்பது இராணுவ வலயத்தினுள் அச்சத்துடன் வாழ்தல் பற்றியதாக அமைந்துள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பாடசாலைகள் இராணுவ கெடுபிடிகளின் மையமாக நிகழ்கின்றன. ஒரு சிறுவன் சுகவீனம் காரணமாக பள்ளிக்கு வராது நிற்பதாயின் பிரிகேடியர் ஜனகபெரேராவிடம் அனுமதி பெறவேண்டும் என்ற கொடுநிலை அங்கு ஏற்பட்டுள்ளது. யாழ்குடாவில் பாடசாலைகளும், தனியார் கல்வி நிலையங்களும் தொடர்ச்சியாக இராணுவ கண்காணிப்பினுள் உள்ளன. பிநிலையே ஆக்கிரமிப்புக்கான ஆயுதமாக சந்திரிகா சிறுவர்களுக்கு எதிராக பயன்படுத்துகின்றார்.

வன்னியில் உணவு சிக்கலுக்கு அப்பால் தொடர் இடப்பெயர்வுகள் சிறுவர்களை நிர்க்கதி நிலைக்கு தள்ளுகின்றது. தொடர் இடப்பெயர்வுகள் கல்வி உரிமையை பறிப்பதுடன் சிறுவர்களை தொடர்ச்சியான சிதைவுக்கு உட்படுத்த விளைகின்றது.

வன்னியில் உள்ள 89 பாடசாலைகளில் 75 இராணுவத்தால் சேதப்படுத்தப்பட்டுள்ளது. குண்டு வீச்சுக்களே இதனை புரிகிறது. ரணகோசா 1, 2ன் போது கூட இராணுவத்தினர் தாம் கைப்பற்றிய இடங்களில் உள்ள பாடசாலைகளிலேயே முகாமிட்டுள்ளதுடன் இராணுவத்தால் விரட்டப்பட்ட மக்கள் பிறிதொரு கிராம பாடசாலையிலேயே தங்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி உள்ளனர்.

வன்னியில் மின்சாரம் இல்லாதது இரவில் விளக்கெண்ணையில் படிப்பதாயின் அதனது விலை ஒரு லீட்டர் 800 ஆகும். இது கல்விக்கான பொருளாதார சாத்தியத்தை இல்லாதாக்குகின்றது.

உலகம் பூராவும் தமிழ் சிறுவர்களை தனது பரப்புரை பொருளாக சந்திரிகா அரசு பாவித்துவருகின்றது. உலக உடன்பாடுகளின் கீழ் 17 வயதுக்கு கீழ் உள்ள சிறுவர்கள் போரில் ஈடுபடக்கூடாது என காரணம் காட்டி தமிழ் சிறுவர்கள் போர் புரிகின்றார்கள் என கதிர்காமர் முதலைக்கண்ணீர் வடித்து வருகின்றார்.

தனது நாடகத்தின் ஒரு அங்கமாக ஐநா சபையின் அவதானத்தை இவர் கோரினார். ஐநா. செயலாளர் நாயகம் தனது சிறப்பு தூதுவராக திரு. ஒலரா ஒட்டுனுவ வன்னிக்கு அனுப்பி நிலைமைகளை ஆராயும் முடிவினை எடுத்தார். சிறிலங்கா எதிர்பாராத விதமாக ஒட்டுனுவின் பயணம் தமிழ்ச் சிறுவர்களின் நிஜத்தை உலகிற்கு காட்டுவதாக அமைந்துவிட்டது.

அனைத்துலக சிறுவர் உடன்பாட்டை பற்றி கண்ணீர் விடும் சந்திரிகா அரசு மனித உரிமைகள் உடன்பாடு போன்ற பல்வேறு நாகரீக உலகின் இணக்கங்கள் பற்றி கவலை கொள்ளாதிருப்பதை அவதானிக்கலாம்.

இவ் ஆபத்தான இனப்படுகொலையின் சாராம்சத்தைக் கொண்ட சவாலை எதிர் கொள்ள தமிழீழ தேசம் தன்னகத்தே பல்வேறு உட்கட்டுமான பணிகளையும், செயற்திட்டங்களையும் அமுல்படுத்திவருகின்றது.

இதன் ஒரு பகுதியாக 1999ம் ஆண்டை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சிறுவர் ஆண்டாகப் பிரகடனம் செய்து தமிழ் சிறுவர்களின் பிரதான சிக்கல்களை எதிர்கொள்ள முடிவு செய்துள்ளது.

தனது துரித புனர் வாழ்வு பணிகளூடு சிறுவர் மேம்பாட்டை மையமாகக் கொண்டு பல சிறுவர் நலத்திட்டங்களை இவ்வாண்டு முடுக்கிவிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இவ் சவாலின் தாக்கத்தை இரசித்து தன் சமூக மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கிறது.

ஆரம்ப நாட்களில் போரின் தாக்கத்திலிருந்து சிறுவர்களையும் குழந்தைகளையும் தேற்றுவதற்காக சாதகமான மனோரீதியல் போக்கைக் கொண்ட கேளிக்கை இட்ட பூங்கா போன்ற திட்டங்களைச் செயற்படுத்தினர்.

கல்வி பற்றிய பிரக்ஞை சமூக வாழ்வில் உன்னொரு பட்டங்களின் நூல் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

சிறுவர் குழந்தைகள் நலன்களைப் பேணும் பல்வேறு செயற்திட்டங்களை எமது தேசியத் தலைவரே முன்னின்று வழி நடத்துவதால் விடுதலைப்போர் நூற்கமாக இடம் பெறும் காலகட்டங்களில் கூட சிறுவர்களின் நலன் பற்றிய சிந்தனை விடுதலைப் புலிகளின் பிரதான நிகழ்ச்சித்திட்டத்தில் இடம் பெற்று வருகின்றது. செஞ்சோலைகள் போன்றன தமிழீழத்தில் எதிர்காலத்திற்கான திட்டங்களாகும்.

எதிரியின் போர் சமூக வாழ்வை சிதைத்து அழிக்க முற்படுகையில் தமிழர்களை பாதுகாக்கும் போரின் புரட்சிகரத்தன்மை இளைய தலைமுறையிடம் படிப்படியாக ஆழ வேரூன்றிவருகின்றது. மொழி பற்றிய பிரக்ஞையும் நவீன கல்வி பற்றிய பார்வையும் இச் சிறுவர்களின் எதிர்காலம் தொடர்பான சிந்தனைகளில் தாக்கம் பெற்று வருகின்றது. கால ஓட்டத்தின் ஊடு தமிழ்ச் சிறுவர்களைப் பாதுகாக்கும் பணி உலகளாவிய தமிழர் தேசியத்தின் கைகளிலும் கொடுக்கப்பட்டுள்ளது.

**களம்**

# முகம் காட்டும்

## 'நாங்கள் நிற்கும் இடத்தில் இராணுவம் குவிகிறது. எங்களைப் பார்க்க வேண்டாம் நாங்கள் நிக்கிற இடத்துக்கு ஷெல் போடுங்கோ'

Tamileelam Archive

தாக்குதல் தொடங்க முன்பே அவர்கள் பரந்தனுக்கும் கரடிப்போக்குக்கும் இடையில் நுழைந்து யாழ் வீதியை ஊடறுத்து விட்டனர். கூடவே கையோடு ஓசை எழுப்பாமல் பக்குவமாகக் கொண்டு சென்ற மண்வெட்டிகள் சாக்குகளைப் பயன் படுத்தி பதுங்கு குழி வெட்டி, மணமூடைகள் அடித்து, நிலைகளை அமைத்து முடிக்க நள்ளிரவு கடந்துவிட்டது.

1998. 09. 27 அதிகாலை

கிளிநொச்சியிலிருந்து எதிரியின் முன்னரங்க நிலைகளை எமது அணிகள் தாக்கத் தொடங்கின. எதிரியின் அரண்களை எம்மவர் கைப்பற்றுவதும், விடுபட்ட அரண்களுக்கு மீண்டும் வர அரச படைகள் முயற்சிப்பதுமான சண்டை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

சண்டையின் உக்கிரம்தாளாமல் பின்வாங்கப் போகும் படைகளை வரவேற்க, ஊடறுத்து அரணமைத்திருந்த புலிகளின் அணிகள் காத்திருந்தன. இடையிடையே உதிரி உதிரியாக ஆனையிறவுக்குத் தப்பியோட முயன்ற படையினரைச் சுட்டு வீழ்த்திக் கொண்டிருந்தனர். அன்று மாலை கிளிநொச்சியிலிருந்த படையினருக்கு உதவும் நோக்கில் ஆனையிறவுத் தளத்திலிருந்து டாங்கிகளுடன் விரைந்து வந்த படையினர், இவர்களிடம் பொறி பறக்க வாங்கிக் கட்டிக் கொண்டு பாரிய இழப்புக்களுடன் வந்த வழியைப் பார்த்து ஓடினர். இதன் பின்னர்தான் கிளிநொச்சியிலிருந்த படையினருக்கு நிலைமை புரிந்தது. முன்னாலும் அடி தொடர்கின்றது பின்னாலும் அடி விழுந்துவிட்டது என்ற நிலையில் படையினர் மறுநாள் மாலையில் தப்பியோடத் தொடங்கினர். ஓடும் படையினரின் பின்புறமாக புலிகள் அங்குலம் அங்குலமாக துடைத்தளித்துக் கொண்டு வர, முன்னே ஆனையிறவுக்குத் தப்பியோடும் பாதையில் தமக்காகப் பின்னப்பட்டிருந்த சாவு வலையின் நீளம், அகலம் தெரியாமல் படையினர் ஓடினர். ஓடியவர்கள் பொறியில் அகப்பட்ட எலிகள் ஆயினர். ஓடிக்கொண்டிருந்த படையினர் எமது அணிகளின் துப்பாக்கிகள் துப்பிய ரவைகளால் தைக்கப்பட்டு வீழ்ந்தனர். முன்னேவந்து வீழ்ந்தவர்களை விடவும் ஏராளமான படையினர் பின்னே ஓடிவந்து குவியத் தொடங்க களநிலைமை சூடாகியது. சாவு அச்சத்தில் ஓடும் படையினரின் தற்காப்புத் தாக்குதலின் வேகமும் அதிகரிக்க, ஒரு எதிரியைத் தானும் தப்பிச் செல்ல விடக் கூடாது, என்று எமது அணிகளின் சூட்டு வேகமும் அதிகரிக்க வர்ணனைகளுக்கு அப்பாற்பட்ட, வார்த்தைகளுக்குள் கட்டுப்படுத்த முடியாத சண்டை ஒன்று அன்று அந்த இடத்தில் நடந்துகொண்டிருந்தது.

அணியொன்றின் மேலாளரான செல்வியின் குரல் சண்டையின் மைய வழிநடத்துனருக்கு நிலமையை தெளிவாகக் கம்பீரமாக அறிவித்தது.

'நாங்கள் நிற்கும் இடத்தில் இராணுவம் குவிகிறது எங்களைப் பார்க்க வேண்டாம் நாங்கள் நிக்கிற இடத்துக்கு ஷெல் போடுங்கோ'

என்றவாறு தமக்கு மிக அண்மையான நிலைகளைக் கூட செல்வி அறிவித்துக் கொண்டிருந்தார். அவர் குறிப்பிட்ட இலக்குகளுக்கு கல்வெறி விழுவதைப்போல, ஆலங்கட்டி மழை பொழிவதைப் போல எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. ஏராளம் பகைவரின் உயிரைக் குடித்தன. அரச படையின் சாவா, வாழ்வா என்ற போராட்டத்தில் ஒரு படைவீரன் எறிந்த கைக்குண்டு செல்வியின் காலைக் காவு கொண்டது. பலத்த காயமடைந்த செல்வி ஒரு கைக்குண்டை எதிரிக்கு எறிந்து கொன்று விட்டு ஓய்ந்துவிட்டாள்.

அந்தச் சண்டையில் அதிக இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் அந்த இடத்தில்தான். அனுபவமிக்க, தன்னம்பிக்கையான, துணிச்சலான, நிதானமான, அணித்தலைவி ஒருத்தியை, லெப்டினன்ட் செல்வியை நாங்கள் இழந்ததும் அந்த இடத்தில்தான்.

சண்டை முடிந்து விட்டது. கைகால்களுக்கு இடையில் இடறிக் கொண்டிருந்த படையினரின் உடலங்கள், கைக்குண்டுகள், ஆயுதங்கள், எல்லாம் அகற்றப்பட்டு விட்டன. அணிகள் சீரமைக்கப்பட்டு விட்டன. அவர்கள் ஆனையிறவைப் பார்த்தவாறு புதிய காவலரண்களை அமைத்துக் கொண்டிருந்தனர். எந்த நேரமும் எதிரியின் எறிகணைகள் வந்து விழலாம். என்றாலும் அங்கே பாட்டுக்கும் கூத்துக்கும் பம்பலுக்கும் பஞ்சமில்லை. கூடவே நின்று கூத்தாடிய அநேக தோழிகளை இழந்த சோகம் அழியவில்லை. அந்தத் துயரை, காய்ச்சிய பாலின் மேலாடை படருமே, அது போல ஒரு மெல்லிய படையாக இந்தப் 'பம்பல்' மறைத்துக் கொண்டிருந்தது. வேலை





செய்து கொண்டு தனது அணியைப் பார்க்க வந்தார் அவர்களின் பயிற்சி ஆசிரியர்.

'நீங்கள் ஏன் அக்கா இஞ்ச வந்தனீங்கள்?'

என்று உரிமையோடு கடிந்து கொண்டு அவரை இழுத்து பதுங்கு குழிக்குள் இருத்தி விட்டு, தங்கள் அனுபவங்களை 'அது அப்படியக்கா, இது இப்படியக்கா' என்று பகிர்ந்து கொண்டார்கள்.

'இது சண்டை மாதிரியே இல்லை. ஒத்திகை செய்த மாதிரித்தான் இருந்தது. நாங்கள் ஆமியைச் சுட்டு சுட்டுக் கொண்டு ஒவ்வொரு 'பொயின்ராப்' பிடிச்சுக் கொண்டே போனம். எங்களுக்கு 'பொயின்ற்' பிடிச்சதைத்தவிர வேற ஒண்டும் தெரியாது அப்படியே விட்டிருந்தா நாங்கள் எது வரைக்கும் போயிருப்பமோ தெரியாது.'

- என்றார்கள், அதற்குப் பயிற்சி ஆசிரியர் அவர்களைக் கண்டிக்க 'நீங்கள் எங்கட இடத்தில நிண்டிருந்தா, விழுந்து கிடந்த எங்களின்ர பிள்ளையளின்ரை 'பொடி'யைப் பார்த்து விட்டு ஆமியைச் சுட்டுக் கொண்டு ஆனையிறவு வரைக்கும் போயிருப்பீங்கள்......'

என்றாள் ஒருத்தி. ஒருவருமே பேசவில்லை. அமைதி. அவள் தொடர்ந்தாள்.

'எங்களுக்கு ஒரு கடன் இருந்தது. வீரச்சாவடைஞ்ச பிள்ளையளுக்குச் செய்ய வேண்டிய கடன். இந்தச் சண்டையில அந்தக்கடனை அடைச்சிட்டம். ஆனா புதுசா கடன் பட்டிட்டம்.'

**'நடடா ராசா மயிலைக்காளை**
**நல்ல நேரம் வருகுது**
**நடடா ராசா சிவலைக்காளை**
**நாளை விடியப் போகுது'**

இந்தப் பாடலில் எங்களுக்கு ஒரு தனி விருப்பம். ஒரு நாள் யாழ் வீதி முழுமையாக எங்கள் கட்டுப்பாட்டுக்கு வந்த பின் முழு நிலா வேளையில் நாங்கள் வன்னியிலிருந்து வரிசையாக வண்டிகள் கட்டிக் கொண்டு, நாங்களே வண்டியை ஓட்டிக் கொண்டு (இடையே மாடுகள் தறிகெட்டு ஓடி வண்டி குடைசாய்ந்தால் என்ன செய்வது என்பது வேறு விடயம்) ஆனையிறவு கடந்து யாழ்ப்பாணம் போகவேண்டும். என்பது எங்களின் நீண்ட காலக்கனவு நிலவு நாட்களில் இது தவறாது நினைவு வரும். ஒவ்வொரு முழு நிலாவின் போதும் எங்களில் யாரோ ஒருவர் அல்லது சிலர் இருப்பதில்லை என்பதும் நினைவில்



# நிகழ்வுகள்

## திருப்பு உன் குதிரைகளை

- கருணைரவி

**கணக்கெடு!**
**உவிந்து எடுக்கப்பட்ட**
**ஒவ்வொரு நிலங்களிலும்**
**எத்தனை குதிரைகள் கட்டப்பட்டதென்று.**
**கடிவாளங்களைக் கழற்றி**
**அடைக்கப்பட்ட லயங்களில்**
**பின்பு கணக்கிட முடியாது.**
**மீட்போர் லயங்களை**
**உழத்தொடங்கி விட்டார்கள்.**
**'ஓயாத அலைகள்' மூகளையில்**
**துவம்சிக்கப்படும் உம் லயங்கள்**
**உமக்கே குதிரைகளின் கணக்குகள்**
**தெரியாமல் போகலாம்.**
**துருவிக்கப்படுகையில்**
**தலைகள் இல்லதவற்றை**
**உடல்கள் உயிரவற்றை...**
**முல்லைத்தீவைப்போல்**
**தவ்த்தி விடுவாய்**
**உம்முடையதில்லை என்று!**
**கிளிநொச்சி உம்மை**
**கிலி கொள்ள வைக்க விட்டது.**
**பலியிட வேண்டாம் உம் குதிரைகளை**
**திருப்பு உம் லயத்துக்கு!**
**இனி ஓயாத அலைகள் சுழல்களில்**
**மாறிப்போகும் உம் லயங்களில்**
**நாறிப்போகும் உம் குதிரைகளும்.**

வந்து உறுத்தும்.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் கிளிநொச்சி - பரந்தன் மீதான தாக்குதலில் கிளிநொச்சியின் சில இடங்கள் எம் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின் எஞ்சியிருந்த கனவுக் கூட்டத்தில் ஒருத்தி சொன்னாள்.

இன்னுமொரு அடியோடை, நாங்கள் வண்டி கட்டலாம்' மிகுந்த நம்பிக்கையோடுதான் அவள் சொன்னாள்.

ஓயாத அலைகள் 02 நடந்துவிட்டது கனவுகள் சுமந்தோரின் போரல்லவா? இனியென்ன, இன்னுமொரு அடி! அல்லது இன்னுமொரு அடி. அவ்வளவுதானே.

இந்த எண்ணம் மேலுக்கு ஓடிக்கொண்டிருந்தாலும், மனமென்னவோ இழந்த தோழிகளைச் சுற்றித்தான்.

எத்தனை ஆண்டுகள் போனாலும் ஆறாத புண், சண்டை முடிந்த இரண்டாம் நாள் I.B.C யில் ஈழகானம் ஒன்றை ஒலிபரப்பினார்கள். அது எம் முன் பாய்ந்து நெஞ்சக் கூட்டுக்குள் எதிரொலித்தது. ஒரு கணம் அசைவியக்கத்தை நிறுவியது.

**'ஓ... வண்டிக்காரா ஓ...**
**வண்டிக்காரா**
**ஓட்டு வண்டியை ஓட்டு**
**ஓட்டு வண்டியை ஓட்டிப்**
**போவோம்**
**புதிய நகரம் நோக்கி பொழுது**
**போகுமுன்**

ஓட்டிப் போவோம்.'

அருகில் இருந்து கேட்டுக் கொண்டிருந்தவள் அழுது கொண்டிருந்தாள். இன்னுமொரு அடியோட வண்டி கட்டலாம் என்றவள் அருகில் இல்லை. இருந்திருந்தால்.

'ஒரு முழு நிலா நாளில்
ஆனையிறவு தாண்டி யாழ் போகையில்

இந்தப் பாட்டையும் சேர்த்துப் பாடுவம்'

என்றிருப்பாள். ஒரு வேளை அந்த வண்டி எங்களில் ஒருவருமே இல்லாமல் தான் போகுமோ!

போகட்டும்.

வண்டிச்சக்கரம் போகும் பாதை இழந்த வீரர் குருதியாலும் அவர்தம் கனவுகளாலும் தானே செப்பனிடப்படும்.

**உமைகள்**









07-03-99 அன்று மாங்குளப் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துளார்.

**வீரவேங்கை சிங்கன்**
**கோபால்பிள்ளை ஆனந்தராஜா**
அம்பாறைமாவட்டம்

06-03-1999 அன்று மன்னாரில் சிறிலங்கா இராணுவம் பதுங்கி இருந்து தாக்கியதில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளார்கள்.

**கப்டன் விஜயராஜ் அல்லது ஆனந்தராஜ்**
**சுப்பையா ரவிக்குமார்**
123, கென்னியன்குளம் துணுக்காய் மல்லாவி

**கப்டன் சீலன்**
**சுப்பிரமணியம் ஜெயந்தன்**
மயூரஸ் வீதி முளங்காவில் மன்னார்

**2ம் லெப். அகிலன்**
**ஜெயராஜா நாகராஜா**
மல்லாவி

13-03-99 அன்று கிளிநொச்சியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துளார்.

**கருணாகரன்**
**(மாயவன் தனேந்திரன்)**
யாழ். மாவட்டம்

13-03-99 அன்று மணலாற்றப் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துளார்.

**விழிமைந்தன்**
**(திருநாவுக்கரசு கணேஷ்வரன்)**
யாழ். மாவட்டம்

13-03-99 அன்று ஒட்டுசுட்டான் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துளனர்

**கீதன்**
**(குனபாலசிங்கம் மதியரசன்)**
யாழ். மாவட்டம்

**தில்லைநாதன்**
**(கதிர்காமு கிருபாகரன்)**
கிளிநொச்சி மாவட்டம்

**புரட்சி அழகன்**
**(கேந்திரநாதன் கேதரன்)**
மன்னார் மாவட்டம்

13.03.99 முல்லைத்தீவில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**கலையரசன்**
**(ரவீந்திரன் சதீஸ்குமார்)**
யாழ் மாவட்டம்

**தர்ஷன்**
**(பஞ்சலிங்கம் எழில்வேந்தன்)**
யாழ். மாவட்டம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive






# கணப்பொழுது



மேஜர் ரவிக்கா

தங்கத் தலைவன் பிறந்த வடமராட்சி மண்ணிலே யோகலட்சுமி என்ற இயற் பெயருடன் 02.08.72 அன்று தமிழீழ மண்ணிலே உதயமானாள். எல்லோராலும் பிள்ளை என்ற செல்லப் பெயருடன் அழைக்கப்பட்டாள். விளையாட்டிலும், படிப்பிலும் திறமையாக செயல்ப்பட்டு பரிசில்களைப் பெற்றாள். தனது பெற்றோர் உடன்பிறப்புக்களை எவ்வளவு தூரம் நேசித்தாளோ அவ்வளவு தூரம் தாய் மண்ணையும் தலைவரையும் நேசித்தாள். அன்னிய வெறிகொண்ட இந்திய இராணுவம் தமிழீழ மண்ணிலே செய்த அட்டூழியங்களை நேருக்கு நேர் பார்த்து மனம் வெறுப்படைந்தாள். தமிழினம் நிம்மதியாக வாழ படிப்பு மட்டும் போதாது போராட்டமே சிறந்தது என முடிவெடுத்தாள். ஒரு நாள் 'அம்மா நான் பள்ளிக்கூடம் போட்டு வாறன்' என்று கூறிச்சென்றவள் பள்ளிக்கூடம் செல்லவில்லை நேராகச்சென்று விடுதலைப் புலிகளுடன் தன்னை இணைத்துக்கொண்டாள்.

மகளிர் படையினரின் 6வது பயிற்சி முகாமில் பயிற்சி பெற்று இவள் எல்லாப்பயிற்சிகளையும் மிகவும் திறமையாக செய்து பயிற்சி ஆசிரியரால் பாராட்டுக்களைப்பெற்றாள். ரவிக்கா என்ற புதிய பெயருடன் தனது பயற்சியை முடித்து போர்க்களம் புறப்பட்ட இவளுக்கு கனரக ஆயுதமான பிறன் எல். எம். ஜி கொடுக்கப்பட்டது. பலாலி, மாங்குளம், பூவரசங்குளம் போன்ற பகுதிகளில் இவளுடைய பிறன் எதிரியை பதம் பார்த்தது.

ஆனையிறவு கூட்டுத்தளம் மீதான தாக்குதலில் பங்கேற்று இவள் வீரத்தழும்பைப்பெற்றாள். ஒரு நாள் தளபதி வந்து 'ரவிக்கா எனி உனக்கு சண்டைக்கு பயிற்சி எடுக்க முடியாது அதால படிக்கப்போ' என்று கூறிமுடிப்பதற்குள் துள்ளி எழுந்து தளபதியை நோக்கி 'அக்கா நீங்க எனக்கு என்ன தண்டனை தந்தாலும் செய்வன் எனக்கு பயிற்சி எடுக்க முடியும் நான் சண்டைக்குத்தான் போகப்போறன் படிக்க மாட்டன்' என்று உறுதியாகச் சொன்னாள். தளபதி எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்கவில்லை காயம் மாறி மீண்டும் தாக்குதல் அணியில் வந்து சேர்ந்தாள்.

இவளின் திறமையினால் ஒரு குழுவிற்கு தலைவியாக நியமிக்கப்பட்டாள் எல்லாப்பிள்ளைகளுடனும் சேர்ந்து தானும் பயிற்சிகள் செய்வாள் பிள்ளைகளுடன் அன்பாகவும் பாசத்துடனும் பழகுவாள். ஒருமுறை அவளின் குழுவில் ஒரு பிள்ளைக்கு காய்ச்சல், அப்பிள்ளைக்கு அருகில் இருந்து இரவு முழுக்க கண் விழித்து மிகவும் அக்கறையுடன் கவனித்தாள். பிள்ளைகளிற்கு தாய்க்கு சமனாக செயற்படும் இவள் தளபதிமாருக்கு செல்லப் பிள்ளை. புலோப்பளையில் முன்னேறி வந்த சிங்கள இராணுவத்தினருடன் சண்டையிட்டாள் பின்பு பூநகரி கூட்டுத்தளம் மீதான தாக்குதலில் பங்கேற்று வெற்றியுடன் திரும்பி வந்தாள் இவ்வாறு பல களம் சென்று வந்த இவளுக்கு நீண்ட நாளாக ஒரு ஆசை தான் கரும்புலியாக செல்லவேண்டும் என்று தனது விருப்பத்தை எழுதி தலைவரிடம் அனுமதி கேட்டிருந்தாள். தலைவரிடம் இருந்தும் பதிலும் வந்தது அதில் அடுத்த பயிற்சியில் உங்களை சேர்ப்பதாக என எழுதப்பட்டிருந்தது அக்கடிதத்தைக் கண்டவுடன் துள்ளிக்குதித்து சந்தோசப் பட்டாள். அக்கடிதத்தை பொலுத்தீன் பண்ணி மிகவும் பாதுகாப்பாக வைத்திருந்தாள்.

மண்டைதீவு சண்டைக்காக பயிற்சிகள் ஆரம்பமானது அதில் ஒரு பகுதிக்கு இவள் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டாள். தனக்கு கொடுக்கப்பட்ட பகுதியை எதிரியிடம் இருந்து அடித்துப் பறித்து வெற்றி பெறுவேன் என்று அடிக்கடி சொல்லியவாறே பயிற்சிகள் எடுத்தாள். 28.06.95 அன்று சண்டைக்காக குழு ஆயத்தமானது அதில் இவளும் தனது குழுவுடன் தனது பகுதியை நோக்கி விரைகிறாள் அவள் சொன்னது போலவே தனது பகுதியை எதிரியிடம் இருந்து கைப்பற்றி அள்ளப்பட்ட நிறைய ஆயுதங்களுடன் வெற்றிக் களிப்புடன் தனது குழுவுடன் திரும்புகிறாள். அந்த நேரம் அவளின் முகத்தை உற்று நோக்குகிறேன் களைப்படைந்த அந்த முகத்தில் ஒரு புன்சிரிப்பு நான் சொன்னதை செயலில் காட்டி விட்டு வெற்றியுடன் நிக்கிறேன் என்றது அவளின் சிரிப்பான தோற்றம்.

நீண்ட நாட்களுக்குப்பின் அன்று தான் அவளை நான் சந்திக்கின்றேன் தான்பிடித்த சண்டையை மகிழ்ச்சியுடன் சொல்லிக்கொண்டிருந்தவளின் முகம் சோகத்திற்கு உள்ளாகிறது ஏன் என்ற கேள்விக்குறியுடன் அவளை நான் நோக்குகிறேன் எனது கேள்வியை புரிந்துகொண்டவள் போல் 'எனக்கு உடனை வீட்டுக்காரரை பார்க்க வேணும் போல இருக்கு என்ர அம்மான்ரை கையாலை சாப்பிடவேணும் என்றாள் கவலையுடன்" தாய் மண்ணை, தலைவரை எவ்வளவு தூரம் உயிருக்குயிராய் நேசித்தளோ அவ்வளவிற்கு அவள் தாய், தந்தை, சகோதரர்களை நேசித்தாள். அவளின் உணர்வை புரிந்து கொண்ட நான் விடைபெறும் நேரம் என்னை நோக்கி, நான் சில நேரங்களிலை வீரச்சாவடைந்தால் என் புதைகுழிக்கு மூன்று பிடி மண் போடு என்றாள் என்னுடைய கண்ணில் நீர்சுரக்க அவளிடம் இருந்து விடைபெற்றுச்செல்கிறேன். இதுதான் அவளை நான் காணுவது கடைசி என்று தெரியாமலே செல்கின்றேன்.

ஆம் சில நாட்களில் யாழ் மண்ணை பிடிக்கும் நோக்கோடு முன்னேறிப்பாய்ச்சல் நடவடிக்கை மூலம் நூற்றுக்கணக்கான அப்பாவித்தமிழ் மக்களை கொன்று குவித்த வண்ணம் முன்னேறுகிறான் கொடிய சிங்கள வெறியன் புலிகளுடன் நேருக்கு நேர் மோத துணிவில்லாத அக் கொடியவன் அப்பாவி மக்களை கொன்று குவிப்பதைக் கண்டு தலைவர் கொதித்தெழுந்தார். அவர் மாத்திரமா, அவரால் உருவாக்கப்பட்ட அனைத்துப் போராளிகளும் கொதித்தெழுந்து போருக்கு ஆயத்தமானார்கள்.

இதில் ரவிக்காவின் குழுவும் அடங்கும் என்றும் இல்லாதவாறு கலகலப்பாகவும் சந்தோசமாகவும் எல்லோரிடமும் "என்னை இனிக்காணமாட்டீங்க நான் புலேந்திரன், குமரப்பா அண்ணாக்களிடம் செல்கிறன்" என்று கூறி புதிய சீருடை அணிந்து போருக்கு ஆயத்தமாகிறாள். 14.07.95 அன்று தலைவரால் பெயர் சூட்டப்பட்ட புலிப்பாய்ச்சல் நடவடிக்கை ஆரம்பமானது ஆயிரம் ஆயிரம் புலிகளோடு இவளும் எதிரிமீது பாய்கிறாள் எதிரியோ திக்குத்திசை தெரியாது செத்தோம் பிழைத்தோம் என்று கத்திக்கொண்டு பின்வாங்கி ஓடுகிறான்.

எதிரியை துரத்தி எமது அணியினர் முன்னேறுகின்றார்கள் முன்னேறிய பாதையால் எதிரியை பின்னுக்கு துரத்தி விட்டு வெற்றியுடன் திரும்பும் நேரம் எல்லோரும் கலகலப்பாக போகவோ என்று அவர்களை பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பிக்கொண்டிருந்த வேளை குண்டு இவளுக்கு அருகாமையில் வெடித்துச் சிதறுகிறது எங்கும் புகைமண்டலம் தங்களுடைய பொறுப்பாளரை காணாத பிள்ளைகள் அவள் நின்ற இடத்திற்கு விரைகின்றார்கள் துப்பாக்கியை இறுகப்பிடித்தபடி தமிழீழ மண்ணை தனது குருதியால் குளிப்பாட்டிய அவ் வீரவேங்கை தமிழீழ மண்ணை முத்தமிட்டவாறு கிடக்கிறாள். அக்கணப் பொழுதில் எனது விழிகளில் நீர் நிரம்பியது ரவிக்கா உனது இலட்சியம் நிறைவேறும் வரை உன் கனவுகளைத் தாங்கி நிற்போம்.



# ஒரு இரவும் காலமும்

இரண்டு மாதத்திற்கு பிறகு செல்வியிடமிருந்து நேற்றுத்தான் கடிதங்கள் வந்தன. கிட்டத்தட்ட எட்டுக் கடிதங்களுக்கு மேல். நண்பர்கள் நக்கலடிப்பதைப் போல நிச்சயமாக அவள் எல்லாக்கடிதங்களையும் ஒரேயடியாக எழுதியிருக்கமாட்டாள். தபால் போக்கு வரத்தில் ஏதோ சிக்கல்கள் நிகழ்ந்திருக்க வேண்டும்.

கடிதத்தை அஞ்சலிடும் போது எப்பொழுதுமே கடித உறையின் கீழ் மூலையில் தன்னுடைய பெயருக்கு கீழே அஞ்சலிடும் திகதியை எழுதுவது அவளுடைய வழக்கமாக இருக்கும். அதனால் கடைசியாக எழுதிய கடிதத்தை கண்டுபிடிப்பது அவ்வளவு கஸ்ரமாக இருக்கவில்லை அவனுக்கு.

அவளுடைய எல்லாக் கடிதங்களுக்கும் இரவே பதில் எழுதிவிட வேண்டும் என அவன் நினைத்தான். யூலை 25 எனத் திகதியிடப்பட்டிருந்த ஒரு கடிதத்தில் தனக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது என்றும் இரண்டு கிலோ கற்கண்டை மட்டும் வாங்கி தெரிந்தவர்களுக்குக் கொடுக்குமாறும் எழுதியிருந்தாள். இருபது கிலோ கற்கண்டை துண்டுகளாக்கிச் சாப்பிடக்கூடிய நண்பர்களை அவன் மிக நல்ல சிநேகிதமாகக் கொண்டிருந்தான். இவர்கள் ஏற்கனவே திருமணத்தின் போது அழைப்பு விடாததற்கு குறைபட்டுக் கொண்டவர்கள். இப்போதும் அப்படித்தான். கொடுத்தால் எல்லோருக்கும் கொடுக்கவேண்டும். அல்லது கொடுக்காமல் இருக்கவேண்டும். அவ்வாறிருத்தல் சாத்தியமா? முகஞ்சுழிப்பார்கள்.

கடைகளில் ஒவ்வொரு சாமானும் நெருப்பு பிடிக்கிற விலை. [illegible]

ஏதாவதொரு தாழ்வாரத்தில் உட்கார்ந்து கழித்தார்கள். யுத்தம் பற்றியும் அதன் இழப்புக்கள் குறித்தும் சினிமா, இலக்கியம் என்று இன்னும் என்னென்ன இருக்கிறதோ அது பற்றியெல்லாம் பேசியிருக்கிறார்கள்.

திருமணமாகிய பின்பும் அவன் இவ்வாறு பொறுப்பற்று வெட்டிப் பேச்சு பேசிக்கொண்டிருப்பது பற்றி செல்வி அலுத்திருக்கிறாள். வேலையற்றிருந்த நாட்கள் அவை. எல்லா நிர்வாகங்களும் குழம்பிப் போயிருந்தன. யுத்தம் குருதி வழியும் தனது நகங்களையும் தீயுமிழும் கண்களையும் மனிதர்களை நோக்கி கோர்த்தபடியே திருப்பியிருந்தது. மனிதர்கள் கருகி அழிந்தார்கள். வயல்வெளிகள், நீர்நிலைகள், காடுகள் எங்கும்... எங்கும் யுத்தம் கருக்கிய முகங்கள்.



அந்த வீட்டைச் சூழ இருந்த இரண்டு ஏக்கர் நிலத்தில் இப்போது ஒரு அடி நிலம் மிஞ்சாமல் அகதிக் குடிசைகளாக நிறைந்து போயிருந்தன. கைகளுக்குள்ளும், கால்களுக்குள்ளும் திருவிழாக்கால கோவிலிலிருப்பதைப் போல மனிதர்கள். அகதி மனிதர்கள்.

மூன்று மழைக்காலங்கள் வந்து போயிருந்தன. இரண்டில் மழையில்லை. இப்போது நான்காவது தொடங்கப் போகிறது. அவர்கள் ஒவ்வொருவரும் ஏக்கத்துடன் அதை எதிர்பார்த்திருக்கிறார்கள்.

மிஞ்சினாலும் தேநீர்ச் செலவு அது இது என்று பறந்துவிடும். சாப்பாடு அலுவலகத்தில் கிடைப்பதால் அதைப்பற்றிய கவலை இல்லை.

எட்டாவது கடிதத்தைப் படிக்கத் தொடங்கியபோது இரவு இரண்டுமணிக்கு மேலாகியிருந்தது. வெளியில் நாய்கள் தொடர்ந்து ஊளையிட்டுக்கொண்டிருந்தன. நல்ல நிலவு. நிலவின் ஒளி பூமியில் எதிரொலித்தது. இரவில் பூமியின் ஒளி மங்கலான கறுப்பு நிறம். பூமியின் ஒளியும் நிலவின் ஒளியும் நாய்களுக்குக் கிறக்கத்தைத் தந்திருக்க வேண்டும். அவை ஊளையிட்டுக் கொண்டேயிருந்தன.

இன்று பகல் இரண்டு மூன்று நாய்கள் ஒன்றையொன்று சூழ்ந்து உறுமி உறுமிக் கடித்த போதும் ஒன்றையொன்று தாக்கிக் கொண்டு ஓடியபோதும் பாட்டியின் நாய்கள் பற்றிய கதை தான் ஞாபகத்திற்கு வந்தது.

[illegible]

எழுதிமுடிக்கவேண்டுமென அவன் மீண்டும் நினைத்தான். விடிந்தால் கச்சேரியில் வேலைசெய்யும் ராமமூர்த்தி வவுனியாவுக்குப் போகிறான். கடிதத்தைக் கொடுத்து விட்டால் ஒரு சில நாட்களில் செல்வியிடம் சேர்த்துவிடக்கூடும்.

[illegible]



[illegible]

– சந்திரபோஸ் சுதாகர் –

[illegible]

* * *

# தேர்தல் பிச்சை!

## வித்தைகள் காட்டினால்தான் சில்லறை கிடைக்கும்!

ஏப்பிரல் முதலாம் திகதி நடைபெறவிருந்த ஐந்து மாகாணங்களுக்கான மாகாண சபைத் தேர்தல் ஏப்பிரல் ஆறாம் திகதிக்கு பின்தள்ளிவைக்கப்பட்டுள்ளது. ஏப்பிரல் முதலாம் திகதி கிறிஸ்தவமதத்தினரின் பெரிய வெள்ளி புனித நாளுக்கு முதல் நாள் வருகின்றது. இந்நாளில் தேர்தல் நடத்தினால், வழிபாட்டுக்கு இடைஞ்சலாகப் போய்விடும் என, கிறிஸ்தவமத மக்கள் தெரிவித்த எதிர்ப்பு காரணமாக இத் தேர்தல் திகதி மாற்றப்பட்டுள்ளது. கிறிஸ்த்தவமத மக்களின் உணர்வுகளையும் புரிந்துகொண்டு நடக்கின்றோம் என்று, சந்திரிகா அரசு கூறிக்கொள்ள இது வாய்ப்பாகப் போய்விட்டது. தேர்தல் பிரச்சாரங்களிலும் இதனைத் தெரிவித்து வாக்குப் பிச்சை கேட்கவும் இது வசதியாகப் போய்விட்டது.

இது இலங்கைத் தீவில் வடக்கு கிழக்கு தவிர்ந்த மற்றைய சிங்களப் பகுதிகளுக்கு பொருந்தும் ஆனால், தமிழர் பகுதிகளிற்கு பொருந்தாது அங்கு கிறிஸ்த்தவமதத்தைச் சேர்ந்த மக்கள் தமிழர்கள் என்பதால் அதற்குச் சாத்தியமில்லை.

சிங்களப்பகுதியில் வாழும் கிறிஸ்த்தவ மதத்தினரின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு தேர்தல் திகதியையே மாற்றிக்கொண்டதாகக்கூறும் சந்திரிகா அரசு, தேர்தல் வெற்றிக்காக மன்னாரில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு, மடுத்தேவாலயத்தையே ஆக்கிரமித்துக்கொண்டுள்ளது. தேர்தலுக்கு பதினைந்து நாட்கள் இருக்க, இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்னார் பேராயர் வணக்கத்திற்குரிய ராஜப்பு ஜோசப் அவர்கள், மன்னார் இராணுவத்தளபதியைச் சந்தித்து, இராணுவ நடவடிக்கையின்போது மடுத்தேவாலயப்பகுதியைத் தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுத்தார். மடுத்தேவாலய வளவிலும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் தஞ்சமடைந்திருப்பதையும் இவ்இராணுவ நடவடிக்கையால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய அவலங்களையும் அவர் எடுத்து விளக்கினார். ஆனால், தேர்தலுக்காகவே இந்நடவடிக்கையை திட்டமிட்டு நடத்தும் சிறீலங்கா அரசு அதனைச் செவிமடுக்க மறுத்து அன்றைய தினமே மடுப்பகுதியைக் கைப்பற்றிக் கொண்டு, சிறீலங்கா அரசு தனது வெற்றிப்பராக்கிரமத்தை அறிவித்தது கூடவே எத்தனை சதுரக் கிலோமீற்றர்கள் பிடிக்கப்பட்டுள்ளன, எத்தனை கிராமங்கள் தம் வசம் வந்தன, பொதுமக்கள் எத்தனை ஆயிரம் என பட்டியல் வாசித்தது.

ஜெயசிக்குறுாய் தோல்வியுடன் கண்டபடி காணாமல்போயிருந்த சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரத்வத்தையோ, முன்னைவர் ஆட்சியில் விடுதலைப் புலிகளின் கைகளில் எத்தனை வீதமான நிலப்பகுதி இருந்தது, தற்போது அவர்கள் கைகளில் எத்தனை வீதமான நிலப்பகுதி உண்டு என்று, பாராளுமன்றத்தில் கணக்குவிடும் வேலையில் ஈடுபட்டுள்ளார்.

வன்னியில் இங்கும் அங்குமாக நடைபெறும் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள், தேர்தலுக்காகவே நன்கு திட்டமிடப்பட்டிருப்பது போலவே வெளிப்படுகின்றது. விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்த் தாக்குதல் இருக்காது என உணரப்படும் பகுதியில், விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பை சந்திக்கவேண்டிவராது என்ற நினைப்பில் இவை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது புலனாகின்றது. விடுதலைப் புலிகளின் கடுமையான தாக்குதலை எதிர்கொள்ள வேண்டிவரும், கடும் இழப்பை சந்திக்கவேண்டிவரும் என உணர்ந்தால், சந்திரிகா அரசு, இத்தேர்தல் காலத்தில், இச்சோதனையில் இறங்காது என்பது தெரிந்தவிடயமே. ஆக தேர்வு செய்யப்பட்ட பகுதிகளில், விடுதலைப் புலிகளின் எதிர்ப்பு கடுமையாக இருக்காது என்று தான் கருதும் பகுதியில், சிங்களப்படை இந்நகர்வை மேற்கொண்டு, தேர்தலுக்கு புள்ளி விபரம் கொடுத்துக்கொண்டிருக்கின்றது. தேர்தலில் கவனம் செலுத்தவேண்டிய இந்நேரத்தில், இதுநாள்வரை இல்லாத முனைப்புடன் இவ்விராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன் இரகசியம் இதுவல்லால் வேறு எதுவாகவும் இருப்பதாகத் தெரியவில்லை.

போர்க்கோசம் ஒன்று என்ற குறியீட்டுப்பெயருடன் பூவரசங்குளத்தில் இருந்து இரணை இலுப்பங்குளத்தையும், போர்க்கோசம் இரண்டு என்ற பெயரில மடுக்கோவிலையும் சிங்களப்படை ஆக்கிரமித்துக்கொண்டு, தேர்தல கோசமாக இதனை முன்வைத்திருக்க, இவ்விரு போர்க்கோசங்களுக்கும் இடையே, விடுதலைப் புலிகள் கடந்தவாரம் முதல் தடவையாக, ஒரு பெரும் இராணுவத்தளத்தையே, ஆட்டிலறி கொண்டு தாக்கி பேரழிவை ஏற்படுத்தியிருக்கின்றனர். மன்னார் தள்ளாடி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் பலமணிநேர தொடர்ச்சியான ஆட்டிலறித் தாக்குதலால் நிலைகுலைந்து போனது. ஆயுதக்கிடங்கு முழுமையாக வெடித்துச் சிதறி பற்றி எரிந்தது. உணவுக்களஞ்சியம் எரிந்து சாம்பரானது. இராணுவ ஆக்கிரமிப்புக் களமுனைநோக்கி ஆயுதங்களைக் கொண்டுசெல்ல தயாராக நின்ற கனரகவாகனங்கள் ஒன்பது பற்றியெரிந்து கரிகின. எதிரியிடம் பறித்தெடுத்த ஆயுதங்களைக் கொண்டு, அவனது தளம் நோக்கி இழப்புக்கள் இன்றி புலிகள் நடத்திய தாக்குதல் இது இவ்வாண்டில் இப்படியான புதிய பாணித் தாக்குதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இது ஒரு ஆரம்பமே எனச் சொல்லிக் கலங்கும் அளவிலேயே சிங்கள இராணுவ அதிகாரிகள் உள்ளனர்.




இலக்குத்தவறாமல் அதன் பிரதான நிலைகள் மீது தாக்குதலை எப்படி நடத்தினர் என்பது, சிங்களத்திற்கு இன்னமும் புரியாத புதிராகவே உள்ளது. பல மைல்களுக்கு அப்பால் தரித்திருந்து நீண்டதூரம் சென்று தாக்கும் இவ்ஆட்டிலறிகளை வெகு லாவகமாக விடுதலைப் புலிகள் பயன்படுத்தியுள்ளனர். இழப்பையும் அதிகளவில் கொடுத்துள்ளனர். இதனைச் சிறப்பாகச் செய்ய அவர்களால் எப்படி முடிந்தது என ஆராயவும் சிறீலங்கா இராணுவத் தளபதி, விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். இதற்கென ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கொழும்பில் குண்டுகள் வெடித்திருக்கின்றன. நீண்டகாலத்தின்பின் தற்கொடைப் பாணியிலான தாக்குதலும் நடத்தப்பட்டிருக்கின்றது. விடுதலைப் புலிகள் குறித்து புலனாய்வு செய்யும் முக்கிய பொலிஸ் அதிகாரி நிலாப்தீன், குறிவைக்கப்பட்டிருக்கின்றார். படுகாயங்களுடன் அவர் உயிர் தப்பியபோதும், தாக்குதல் இலக்கை, தாக்கவந்தவர்கள் கைக்கெட்டும் தூரத்தில் நெருங்கியிருக்கின்றனர். விடுதலைப் புலிகளின் நகர்வுகள், அவர்களின் செயற்பாடுகள் குறித்து துருவித் துருவி நுணுகிநுணுகித் தகவல் சேகரிக்கும் ஒரு புலனாய்வுத் துறை அதிகாரியின் நகர்வுகள் பற்றிய சகல தகவல்களும் சேகரிக்கப்பட்டு, உரிய முறையில் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது என்பதில் தாக்கவந்தவர்கள் வெற்றியடைந்திருக்கின்றனர்.

இதுவிடயத்தில் சிறீலங்காப் பாதுகாப்புத்துறை நிரம்பவும் கலக்கமடையும் என்பதுடன் மையவிசைகள் தாக்குதல் இலக்குகள் ஆவது குறித்து சிங்கள ஆளும்வர்க்கம் கலக்கமடையும் என்பதில் சந்தேகமில்லை.

ஒருவார இடைவெளியில் கொழும்பில் நடந்த குண்டுத் தாக்குதல்கள், புதுவிதமான தலையிடியொன்றையும் சிங்களப் பாதுகாப்புத்துறைக்கு ஏற்படுத்தியிருக்கின்றது. இம்மாதம் ஒன்பதாம் திகதி பெற்றா பஸ்தரிப்பு நிலையத்தில், ஒருவர் கொல்லப்பட்டு பன்னிரண்டுபேர் காயமடைந்த குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின்பேரில், சிறீலங்கா இராணுவத்தினன் ஒருவன் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். அதேபோன்று அடுத்து ஏழுநாள் இடைவெளியில் நடந்த தற்கொடைப்பாணியிலான குண்டுத் தாக்குதலோடு சம்பந்தப்பட்டவர் எனச்சந்தேகித்து, சிறீலங்காப் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கும் தமிழர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளே இவ்விரு தாக்குதல்களையும் செய்துள்ளனர் எனவும், கைதுசெய்யப்பட்ட இராணுவத்தினனும், தகவல் கொடுக்கும் உளவாளியும் இச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டுள்ளனர் எனவும் சிறீலங்காப் பாதுகாப்புத்தரப்பால் கூறப்படுவதை உண்மையென எடுத்துக்கொண்டால், இதிலிருந்து விடுதலைப் புலிகளின் கை, அவர்களின் உள்வீடுவரை நீண்டிருக்கின்றது என்ற உண்மை புலனாகின்றது.

**

— சுப்பு —




## முதலாம் பாகம்
### அத்தியாயம் இருபத்தியேழு

தொடர்ச்சி...

நான்கு பிரிட்டிஷ் சிறைக் கூடக் கப்பல்களான எம்பயர் மொனிட்டர் (Emphire Monitor) எம்பயர் றினவுண் (Emphire Monitor) எம்பயர் கார்டியன் (Embhire Guardian) மகனா காட்டா (Magna Chartq) ஆகியவை வாக்களிக்கப்பட்ட பூமியில் இருந்து உடனடியாகவே அகதிகளை மாற்றியெடுக்கக் காத்துக் கொண்டிருந்தன. ஆனால், அந்த செசாபிக் குடா கப்பல் ஹைபா துறைமுகத்துக்குள் வந்த அதே வேளை, துறைமுகப் பகுதியும், ஹைபா நகரம் முழுவதும், ஒரு பலமான வெடிச்சப்தத்தால் அதிர்ந்தன. எம்பயர் மொனிட்டர் கப்பல் துண்டுதுண்டாகச் சிதறியிருந்தது. இது கரையிலிருந்து நீந்திச் சென்று கப்பலின் பக்கப் பகுதியல் காந்த கண்ணி வெடியொன்றைப் பொருத்திவிட்டு (Magnetic Mlne) வந்த பால்மாக் களியோடிகளின் (Frog Men) வேலையே.

வாக்களிக்கப்பட்ட பூமி துறைமுகத்தில் கட்டப்பட்டதும், அகதிகளை மாற்றும் வேலை உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டது. அதிகமான அகதிகளிடம் இருந்து போராடும் மனோபாவம் விடைபெற்றிருந்தது அவர்கள் அமைதியாக தொற்றகற்றும் அறைகளுக்குச் சென்று ஆடையகற்றப்பட்டு, தொற்றகற்றிகள் விசிறப்பட்டு, ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறதா என்று பரிசோதிக்கப்பட் பின்னர், விரைவாக மீதமிருந்த மூன்று சிறைக்கப்பல்களிலும் ஏற்றப்பட்டனர். அது ஒரு பரிதாபகரமான ஊர்வலமாயிருந்தது. டொவ் லண்டெவ்வும் வேறு இருபத்தைந்து பேரும் ஒரு சாமான் ஏற்றும் பகுதியொன்றினுள் (Hold) தங்களைத் தாங்களே அடைத்துக் கொண்டு ஆபத்தமாகக் குழாய்களை வைத்துக்கொண்டு இயன்றவரை போராடினார்கள். இந்தப்பகுதி கண்ணீர்ப் புகையால் நிரப்பப்பட்டு, பின் இன்னும் உதைத்துக் கொண்டும், சபித்துக் கொண்டும், போராடிக்கொண்டும் இருந்த நிலையிலேயே டொவ் நான்கு சிப்பாய்களால் தூக்கிச் செல்லப்பட்டு மக்னா கார்ட்டாவின் கம்பியிட்ட சிறை அறையொன்றினுள் வீசியெறியப்பட்டான்.

சிறைக்கப்பல்களில், வாக்களிக்கப்பட்ட பூமியை விட நெருக்கடியாய் இருந்தது. டண்ஸ்ரன் ஹல், அபெக்ஸ் குறூய்சர்கள் காவலாய் வர அன்றிரவு ஹைபா துறைமுகம் விட்டு அவை புறப்பட்டன.

இக்கப்பலில் இருந்த யூதர்கள் ஏற்கனவே நெருக்கடிக்குள்ளாயிருக்கும் சைப்பிரஸ் முகாம்களுக்கு அனுப்பப்பட்டிருந்தால், யூதர்களுக்கு ஒரு வெற்றி கிடைத்திருக்கும் ஆறாயிரத்தைநூறு யூதர்கள் ஐரோப்பாவில் இருந்து அகறறப்பட்டு, பலஸ்தீனம் போவதற்காக, சைப்பிரசில் அதிகரித்தபடி காத்திருக்கும் அகதிகளோடு சேர்க்கப்பட்டிருப்பர்.

வாக்களிக்கப்பட்ட பூமியென்று அழைக்கப்பட்ட கப்பலிலிருந்து, எம்பயர் காடியன், எம்பயர் றினவுன், மக்னா காட்டா ஆகியவற்றில் ஏற்றப்பட்டிருந்த அகதிகள், அவர்கள் கப்பலேறிய துறைக்கு, அதாவது ருலோனுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள். எதிர்காலத்தில் பிடிக்கப்படும். தடையை மீறிச் செல்ல முயலும் எந்த சட்ட விரோதக் குடியேற்றக் கப்பலும், அது பயணத்தை ஆரம்பித்த துறைமுகத்துக்கே திருப்பி அனுப்பப்படும்.

அகதிகளுடன் கப்பலிலிருந்த பால்மாக்களுக்கும், மொசாட் அலியாபெற் ஆட்களுக்கும் தாங்கள் செய்ய வேண்டியது என்னவென்று தெளிவாகவே தெரிந்திருந்தது. இவர்கள் தரையிறங்கி ருலோனுக்குப் போய், பிரிட்டிஷார் இந்த நெருக்கடியைச் சமாளித்து விட்டால் இனி சட்ட விரோதக் குடியேற்றம் என்ற விடயத்துக்கே இடமில்லாமல் போய்விடும் என்பது அவர்களுக்குத் தெரிந்தேயிருந்தது.

சிறைக்கப்பல்கள் சிங்கக் குடாவினுள் பிரவேசித்து, கரையிலிருந்து சிறிது தூரத்தில் நங்கூரமிட்டபோது, இரகசியகாப்பு ஆணையொன்று பிறப்பிக்கப்பட்டது.

இக்கப்பல்களின் கப்டன்களுக்கு, அலைகளிலிருந்த பால்மாக்குகள் ஒரே நேரத்தில், ஒரே மாதிரியான செய்திகளைக் கொடுத்தனர். அதில், 'எங்களைப் பலவந்தமாகத்தான் கரையிறக்க முடியும்' என இருந்தது.

சிறைக்கப்பல்களின் கொமாண்டர், அறிவுறுத்தல்களுக்காகப் பிரித்தானிய கடற்படைத் தலைமையகத்துக்கு வானொலிச் செய்திகளையனுப்பினார். இடட்டத்தட்ட ஆங்கில பிரெஞ்சு (Anglo - Frency) உறவுகளை முறிப்பதற்குச் சற்றுக் குறைவான காரசாரமான ராஜதந்திர ரீதியான அழுத்தங்களைப் பிரயோகித்தனர். யூதர்களுக்குச் சார்பான நிலையை எடுக்க வேண்டாம் என்று, கடுமையாக எச்சரித்ததுடன், பலவந்தமாகக் கரையிறக்கத் தங்களை அனுமதிக்கும்படியும் கோரினர். நான்கு நாட்களுக்கு, சிறைக் கப்பல்களிலிருந்து லண்டனுக்கும், லண்டனில் இருந்து பரிசுக்கும், செய்திகளும் அறிவுறுத்தல்களும் பறந்துகொண்டிருந்தன. தொடர்ந்து பிரெஞ்சு அரசாங்கம் பிரிட்டிஷாருக்கு ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் செய்தியொன்றைக் கையளித்தது.

"அகதிகளைப் பலவந்தமாகக் கரையிறக்கப் பிரெஞ்சு அரசு அனுமதிக்காது. அத்தோடு கரையிறக்கும் முயற்சிகளிலும் பங்காளியாக இருக்காது. அகதிகள் தங்கள் சொந்த விருப்பத்தின் மீது பிரான்ஸ் வர விரும்பினால் அவர்கள் வரவேற்கப்படுவார்கள்."



**லியோன் யூரிஸ்**

பிரிட்டிஷாருடன் ராஜதந்திர உறவுகள் நலிந்து போகக்கூடிய நிலையிலும் பிரெஞ்சு அரசாங்கம் யூத சார்பான நிலையை எடுத்தது. அகதிகள் இந்தச் செய்தியினால் புளகாங்கிதமடைந்தனர். கடைசி மனிதன் மட்டும் எல்லோரும் கப்பலிலேயே இருக்கமீளவும் உறுதி பூண்டனர். அதிர்ச்சியிலிருந்து மீண்ட பிரிட்டிஷ் அரசு அகதிகளுக்கு, ஒன்றில் ருலோனில் கரை இறக்கலாம். அல்லது சிங்குடாவில் கப்பலிலேயே செத்து மடியலாம் என அறிவித்தது.

எம்பயர் காடியன், எம்பயர் றினவுன், மக்னா கார்ட்டாவில் இருந்த யூதர்கள் அங்கேயே இருக்கத் தயாராயினர். பால்மாக்குகள், அங்கே பாடசாலைகளை ஆரம்பித்து, ஹிப்ரு மொழியைப் படிப்பித்து, செய்திகளைத் தொகுத்து நாடக அரங்கொன்றை ஆரம்பித்துப் பொதுவாக முடிந்த அளவு இயல்பு வாழ்க்கையை நிலை பெறச் செய்தனர். பிரெஞ்சு அரசாங்கம் தினசரி உணவு வகைகளையும், மருந்து வகைகளையும் ஏற்றிய படகுகளை ருலோனில் இருந்து கப்பல்களுக்கு அனுப்பி வந்தது. பத்துப் பன்னிரெண்டு குழந்தைகளும் பிறந்தன. ஒரு வார முடிவில் அகதிகள் தங்கள் முடிவில் உறுதியாக இருந்தார்கள்.

கரையிலோ செய்தியாளர்கள் மூன்று கப்பல்களைப் பற்றி ஆர்வம் கொள்ளத் தொடங்கியதோடு அவற்றை மூடியிருந்த மௌனத் திரையைப் பற்றி எரிச்சல் கொள்ளவும் தொடங்கினர். ஒரு நாள் கப்பல்களிலிருந்து ஒரு அலியா பெற் உறுப்பினர் நீந்திக் கரைக்கு வந்து முழுக்கதையையும் பிரெஞ்சுச் செய்தியாளருக்குத் தெரிவித்து விட்டான்.

முழுக்கதையும் பிரெஞ்சு, இத்தாலி, ஒல்லாந்து, டென்மார்க நாடுகளில் விரைவாகப் பரம்பி விட, அவமதிக்கும் விதத்திலான ஆசிரியர் தலையங்கங்கள் பிரிட்டிஷாருக்கு எதிராக ஆர்த்தெழுந்தன.

லண்டனோ ஐரோப்பியக் கண்டத்திலிருந்து எழுந்து கொண்டிருந்த கண்டன அலைகளுக்கெதிராகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டது. அவர்கள் அதை எதிர்பார்த்திருந்தார்கள். உண்மையில் அகதிகளின் விடாப்பிடியான பிடிவாதத்தைத் தவிர மற்றெல்லாவற்றிற்கும் அவர்கள் தயாராகவே இருந்தார்கள். கப்பல்களிலிருந்த நிலைமை மிக மோசமாக இருந்தது. உள்ளே மிகவும் வெப்பமான நிலையிருந்ததோடு நோய்களும் அதிகளவில் ஏற்படலாயின. ஆயினும் அகதிகள் கரை வர மறுத்துவிட்டார்கள். அடைக்கப்பட்ட கப்பலின் பகுதிக்குள் வரமுடியாத பிரிட்டிஷ் கப்பல் ஊழியர்கள் [illegible] முந்து கொண்டிருந்தார்கள். இரண்டாவது வார முடிவில் அகதிகள் தொடர்ந்தும் உறுதியாக இருந்ததோடு செய்திகளிலும் இவ் விஷயம் உச்சக்கட்டத்தை எட்டியிருந்தது.

மூன்று வாரங்கள் தாண்டின. நான்கு வாரங்கள் தாண்டின. கடைசியில் இச்செய்தி முக்கியத்துவத்தை இழக்கத் தொடங்கியது. பலவந்தப்படுத்தப்படாமலேயே அப்போது ஒரு யூதன் இறங்கி வந்தான். அவன் இறந்திருந்தான். முழு விஷயமும் மீண்டும் காட்டுத் தீ போல பற்றிக் கொண்டது. மூன்று கப்பல்களின் கப்டன்களும், அகதிகளின் உறுதி எப்போதையும் விட தற்போது அதிகமாக இருப்பதாக அறிவித்தார்கள். வைற்ஹோலின் மீது அழுத்தங்கள் மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. மேலும் சடலங்கள் கரைக்குக் கொண்டு வரப்பட்டால் நிலைமை மோசமாகிவிடும்.

கொள்கை வகுப்பாளர்கள், இன்னொரு வழியைக் கையாள முயன்றனர். அவர்கள், அகதிகளின் பிரதிநிதிகளை பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினை தீர்க்க அனுப்புமாறு கேட்டனர். தங்கள் கௌரவத்துக்குப் பழுதில்லாத வகையில், முழுப் பிரச்சினையிலிருந்தும் விடுபடக்கூடிய மாற்றுத்தீர்வுகளை இதனால் எட்டமுடியும் என்பது அவர்கள் திட்டமாயிருந்தது.

தொடரும்...

## இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

சந்திரிகாவின் நாடகங்கள் உச்சக் கட்டத்தை அடையும் மாதங்களில் பங்குனியும் ஒன்று. காரணம் ஜெனிவாவில் ஆரம்பமாக உள்ள ஐக்கிய நாடுகள் சபை அமர்வின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்டனங்களில் இருந்து விடுபடுவதற்கு சந்திரிகா தனது அரசாங்கத்தை தமிழர்களுக்குப் பொன் முட்டையிடும் வாத்தாக காட்டும் மாதம் இந்தப் பங்குனி மாதம்.

இதன் முதற் கட்டமாக செம்மணிப் புதை குழிகளைத் தனது அரசாங்கம் பங்குனியில் தோண்டுவதற்கு முயற்சிப்பதாக கதிர்காமர் கருணையுடன் ஒரு பிரச்சாரத்தை தொடங்கியுள்ளார். அதே வேளை இந்தப் படுகொலைகளைத் திசை திருப்பும் போலிக் காரணங்களை சிறிலங்கா பரப்பத் தொடங்கியுள்ளது. இந்திய அமைதிப் படைகளின் காலத்தவை என ஒரு கதை. விடுதலைப் புலிகளின் காலத்தவை என மற்றொரு கதையளப்பு. விடுதலைப் புலிகள் விசாரணை செய்யும் நீதிபதிகளை மிரட்டுகிறார்கள் என அப்பட்டமான பொய். இப்படிப் பற்பல காரணங்களைப் பரப்பி செம்மணிப் படுகொலைகளில் இருந்து தாம் தப்பித்துக் கொள்ளலாம் என்பது சந்திரிகாவின் நம்பிக்கை.

ஆனால் இவைகள் எல்லாவற்றுக்கும் மேலாக சந்திரிகாவின் இராணுவத்தினனே சிறிலங்காவின் நீதிமன்றில் தனது மேலதிகாரிகளின் கட்டளையின் படி கைது செய்யப்பட்ட தமிழ் மக்கள் அவனது கண் எதிரிலேயே கொல்லப்பட்டும் குற்றுயிருமாக இப்புதை குழிகளில் போடப்பட்டனர் என்ற சாட்சியத்தை சந்திரிகாவால் மாற்ற முடியாது. இந்த ஒரு சாட்சியமே சந்திரிகா அரசாங்கத்தின் திரிபுவாத முயற்சிகளின் போலித்தனத்தை தோலுரித்துக் காட்டி சந்திரிகாவின் படையினரே இந்தக் கொடுமைகளுக்கு காரணமாக இருந்தனர் என உலகிற்கு அழகாக எடுத்துககாட்டி நிற்கிறது.

ஆதலால் செம்மணிப் புதைகுழிகள் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதற்கு மிகமிக முக்கியமான விழிப்புலச் சான்றுகள்-சாட்சியங்கள். மண்ணைத் தோண்டுதல் என்பது உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சியாக அமையவேண்டுமே தவிர மண்ணைத் தோண்டி உண்மைகளைப் புதைப்பதற்கான செயற்பாடாக மாற அனுமதிக்க கூடாது. இதற்கு செம்மணிப் புதை குழிகள் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து சிறிலங்காப் பாதுகாப்புப் படைகள் விலக வேண்டும் என்ற தேவையைச் சுட்டி நிற்கின்றன என்ற உண்மையை உலகு உணர நானும் நீயும் ஆவன செய்தல் வேண்டும்.

படைகள்விலகல் என்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ நோக்கிற்கு வலிமையூட்டும் கோட்பாடு சிறிலங்காவின் தேசியத்திற்கு ஊறுவிளைக்கும் செயற்பாடு என்றெல்லாம் சந்திரிகா பற்பல வாதங்களை முன்வைக்கலாம். ஆனால் இலங்கைத் தீவின் நவீன வரலாற்றை எடுத்து நோக்குபவர்களுக்கு இந்தப் படைகளின் வருகை தான் இலங்கைத்தீவின் ஒருமைப்பாட்டிற்கு ஊறுவிளை வித்தன-இந்தப் படைகளின் வருகை தான் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்ட இயக்கத்தை உருவாக்கியது என்ற உண்மைகள் விளங்கும். வேறுவிதமாக கூறுவதானால் தமிழீழ விடுதலைப் புலிகளால் சிறிலங்காப் படைகள் தமிழ் மண்ணில் கால்வைக்கவில்லை. தமிழ் மண்ணில் சிறிலங்காப் படைகள் கால்வைத்தமையே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தோற்றுவித்தது.

மன்னாரில் இந்தியாவில் இருந்து களவாக குடியேற வருபவர்களைத் தடுத்தல் என்ற நோக்கிலும் பலாலியில் இந்தியாவில் இருந்து பொருட்கள் கடத்தி வரப்படுவதை தடுத்தல் என்ற நோக்குகளுடனேயே தமிழ் மண்ணில் இராணுவ முகாங்கள் அமைக்கப்பட்டன. தமிழீழ மக்களின் பல பிரச்சினைகள் அவர்களுக்கும் தமிழகத்தில் இருக்கின்ற தமிழ் மக்களுக்கும் இடையிலான உறவுகளை சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் தவறாக பிரச்சாரம் செய்தமையினால் தோன்றியவை. அவ்வாறே இந்தியாவும் இதே கண்ணோட்டத்துடன் தமிழீழ மக்களின் பிரச்சினைகளைப் பார்ப்பதினாலேயே தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை இந்தியத் தமிழ் நாட்டு மக்களிடை பிரிவினைக்கு வித்திடக் கூடும் என்ற தப்பான கருத்துக்களை இந்திய அரசாங்கத்திற்கு ஏற்படுத்தி வந்தன. உண்மையில் தமிழ்நாட்டின் அரசியல் சமூக பொருளாதார சிந்தனைகள் வேறு தமிழீழ மக்களின் அரசியல் சமூக பொருளாதார சிந்தனைகள் வேறு. இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் பாதுகாப்பு அற்றவர்களாக மாற்றப்பட்டமையே அவர்களை சுயநிர்ணய உரிமை கோரவைத்ததே தவிர தமிழர்கள் என்ற இனவுடையாளத்தின் பேரில் அக்கோரிக்கை முன்வைக்கப்படவில்லை. சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் செய்த இனஅழிப்பு நோக்கிலான அரசியல் செயற் திட்டங்கள் தமிழீழ மக்களை ஆயதப்போராட்டத்தின் மூலம் நீதியை நியாயமான தீர்வைக் கண்டடைய வேண்டிய நிலைக்குத் தள்ளியது.

சுருக்கமாகச் சொன்னால் படைகளின் வருகையே எல்லாக் குழப்ப நிலைகளுக்கும் ஆதிகாரணமாக உள்ளது. இந்தப் படைகள் விலகல் தமிழ் மக்களிடை சாதாரண வாழ்வு மீள்வதற்கு மிக அவசிய தேவையாக உள்ளது.

இந்தப் படைகளின் நிலைகொள்ளல் உள்ளவரை தமிழ் மக்கள் தமது அரசியல் எதிர்காலத்தை தாமே நிர்ணயிக்கும் தன்மையினை பெறமுடியாது. சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து போவதற்கான ஒன்று என்பது தவறான கருத்து. இணைந்து வாழ்வதற்கும் சுயநிர்ணய உரிமை தேவை என்பது சுயநிர்ணய உரிமை குறித்த அரசியல் ஆய்வாளர்களின் கருத்து. இணைந்து வாழ்வதா பிரிந்து வாழ்வதா என்பது தேசிய இனங்களின் தலைமைகள் இடையிலான பேச்சுக்கள் மூலம் நிர்ணயிக்கப்பட வேண்டிய ஒன்று. அதற்கு தமிழ் மக்களின் அன்றாட வாழ்வுக்கு ஊறுவிளைக்கும் படைகளின் விலகல் அதிமுக்கியம்.

இதனை மனதிருத்தி நாம் செயற்பட்டால் செம்மணிப் புதை குழிகள மீண்டும் உருவாகாது தடுக்கலாம்.

அன்பின் ஆசிரியர்
(11.03.1999)

## நர்த்தனம்

— யாத்திரீகன் —

எங்கள் வாசல்
வாசமிழந்து கிடந்தது.
கோலம் போட
யாருமில்லை.
நாளும் பொழுதும்
நரிகளின் ஓலங்கள்
பேய்களின் கூக்குரல்கள்,
தூற்றினிலே கானமிசைக்க
ஒரு பட்சிதானும்
அங்கில்லை.
அரவங்கள் உமிழும்
விஷம் படிந்திருந்தது.
அடையாளமற்ற
ஒரு சில என்புகள்
ஏங்கிக் கொண்டிருந்தன.
அடிக்கடி பருந்துகள்

வானமதில் வட்டமிடுகையிலும்
ஒரு நிசப்தமான பொழுது.
நச்சரவங்களின் மீது
'கண்ணன்' கள்
நர்த்தனமாடினர்.
முன்பு
பேய்கள் ஆடிய நிலம்
தீக்காயமிற்று.
விஷப் பாம்புகளின்
பிணங்கள்
அங்காங்கே சிதறிக்கிடந்தன.
'கருங்குழல்கள்'
இயக்குவாரற்று அண்ணாந்து
கிடந்தன.
மீண்டும் எங்களின்
கைகளில் தவழ்ந்தது
அந்தப் பொன்னகரம்.



# உதரம் குளிர்விக்க உதிரம் பாய்ச்சிடுவோம்

களமாடி வீழ்ந்தோரின்
கனவுகள் மிதக்கும் நிலத்தில்
நான் அமைத்திருக்கும் காவலரணுக்கு
கதிரவனே வருக வணக்கம்.
வந்து என்னருகே
இந்த மரக்குற்றியில் அமர்க.
தேநீர் அருந்துகிறாயா - அன்றி
கருவாட்டுக் கறியுடன் பிட்டுத்தின்கிறாயா?
எதுவானாலும் தரலாம்.
உன் விருப்பம் எப்படியோ
அப்படியே செய்யலாம்.

இந்தா தேநீர்.
செத்துப்போன பச்சைப் பேய்களின்
பிணந்தின்ற இலையான்கள்
மொய்க்குமுன் குடி.
பொத்தி வைத்துக் குடி.

கொஞ்சம் பொறு.
சாப்பாட்டுப் பாசலை அவிழ்க்குமுன்
இந்தா தண்ணீர்.
கைகளைக் கழுவு.
சாப்பாட்டை அப்படி விரித்து வைக்காதே.
கொஞ்சமாய்த் திறந்துவிடு போதும்.
இல்லையேல் இலையான்கள் போகும்.

என்ன வயிறு முட்டியதா?
நல்லது.
அந்தத் தண்ணீரில் கைகளைக் கழுவு.
இந்தத் தண்ணீரைக் குடி.
இது சுட வைத்தது.
ஆ... என்னது....
பதுங்கு குழியுள் குதி



அவன் குத்தும் சத்தம் கேட்கிறது.
தலைமேல் விழுமுன் குதி.
சரிதான்
இனிக் கொஞ்சநேரம் தீபாவளி

போகட்டும்
நீ உட்கவருடன் சாய்ந்து
நன்றாக நீட்டி நிமிர்ந்து
அமர்ந்து கொள்.
நான் சொல்வதைக்
காது கொடுத்துக் கவனி
உன் ஆயிரம் புரவிகள்
இழுக்கும் தேரில்
ஏறொன்றைப் பூட்டி
கிளிநொச்சியை உழுதுவிடு.
எதிரியின் எறிகணைகள்
உழுவதைப் போக ஏனைய நிலங்களை
மறு உழவும் செய்துவிடு.
ஆயிரம் கைகளையும்
வீசி எமைத் தழுவும் வாயுதேவனிடம்
விதை நெல்களைக் கொடுத்து
நீ உழுத வழியெங்கும் [illegible]
இன்னொருமுறை நாம்
எதிரியின் மீது பாய்கையில்
வடியும் எங்கள் குருதிக்கு
வாய்க்கால் கட்டி
வயலெங்கும் பாய்ச்சுவோம்.
வருணனையும் ஒழுங்காக
வந்து போகச் சொல்லு.
வயலெல்லாம் விளையட்டும்.
செந்நல் விளையட்டும்.
உண்ணாவிரதமிருக்கும் உறவுகளின்
கொதித்த வயிறு குளிரட்டும்

**மலைமகள்**

# புரட்டாதியில் தீபாவளி, தை...

அஞ்ஞான வாசமானுடத் தவிப்புக்கள்
வார்த்தைகள் கரைந்த
பெருமூச்சுக்கள் முற்றி
கிளிநொச்சியுள் இறங்கியது
கனன்றிடும்
அர்த்த நாரீசப்பிரபாகரமாக.
காற்றின் ஓரங்களில் தீ மூண்டு ஊழிக்க
என்னுடைய தானதுள்
இடை வெளியின்றி
காலூன்றி கவிந்திருந்த
பொல்லாத கறுப்பு நெறுமி நெறுமி
பற்கள் திரவப்பட்டுருக
சிவப்பிப் பீறிட்டு
கருங்கல்லாகிப் பறந்தது.
கிழக்கின் சூரியக்கதிர்கள்
மேற்கின் சுவர்களில் தடையின்றி
காலையில்
முகம் பார்த்து மகிழ்ந்தன.

குயிலின் பாட்டில்
பகை விட்டோடிய
காவற் கொட்டகை மேல்
தான் அமர்ந்திருப்பதாக
வரிகள் வருகின்றன.
அந்தத் திசையில்
இனி ஒரு போதும் உதிராத
குருத்துக்கள் கிளம்புகின்ற
ரங்களின் அமர்கின்றகளிப்பில்
சிறகுத் தூள்கள் விழவிழ
கிளிகள் பேசிப்பது தெரிகிறது
என்மனம் கவ்விய
கரும்புட்டை
கரைந்திறங்கி மாய்ந்தது
பாதங்கள்
காற்றில் மிதக்கின்றன
தாயின் கருப்பையில்
கிடக்கின்ற குழந்தையாய்

என்னருகே
ஒருக்களித்தபடி
சாக்குத் துண்டில்
தூங்கிக் கொண்டிருக்கின்ற
என் அழகிய வஞ்சியே!
எழும்படி! இனி
நீ மகாராணி
புழுதைகளும்
இடிபாடுகளும்
நிறைந்து கிடந்தாலும்
எம் மஞ்சம் அற்புதமானது
போகலாம் வா! வா!
அரக்கமழிந்த போது
புரட்டாதியில் தீபாவளி வந்தது.
வழி பிறக்க மனம் பொங்க
தையும் பிறந்தது
ஓர் வசந்தத்தின்
மீள் வருகையில்
உயிர்த்த ஞாயிறும் வந்தது.

**பொன் காந்தன்.**

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive